# எதிரொலி

ஆஸ்திரேலியா

ETHIROLI

குரல் 06 அதிர்வு 70 சித்திரை 2023 editor@ethiroli.com தொ.பே:1800 960 162







# NSW இன் நிறம் சிவப்பு













ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்

ROYAL INTERNATIONAL MONEY TRANSFERS

EASY • FAST • SAFETY

நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டிநொங்' இல்
புதியதோர் சேவை

BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank

Same day bank transfer

No One Beat Our Rate

THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175

(03) 87649143 0406409403
royalinfomoney@gmail.com


KUMARAN'S
Cafe
Enjoy the
South Indian
Favourites
IDLI | DOSA | VADA | BAJJI
A Complete Vegetarian Restaurant
Call Us For Orders
0413 306 575
RIVERDALE VILLAGE PLUS SHOPPING CENTRE
200, HUMMINGBIRD BOULEVARD, TARNEIT, VIC - 3029.


SAME DAY DELIVERY SERVICE க்கு
தங்களின் அமோக வரவேற்புக்கு
எங்களின் அன்பு நன்றிகள்
SRI KUMARAN
our local store
Whatsapp us 0421 255 557
We have now expanded our services to
CBD | POINT COOK | MANOR LAKES | WERRIBEE | TARNEIT
உங்களின் ஆதரவு! எங்களின் உத்வேகம்!!
OUR STORES
SHEPPARTON | TARNEIT | CLYDE NORTH | NARRE WARREN | CARRUM DOWNS
info@srikumaran.com.au
www.srikumaran.com.au

# NSW இன் நிறம் சிவப்பு

● நச்சினார்க்கினியன்

12 வருடங்களுக்கு பிறகு NSW குடிமக்கள் ஒரு புதிய தொடக்கத்துக்கு வாக்களித்திருக்கின்றனர். இந்தச் சிறந்த மாகாணத்தை நிர்வகிக்க நாங்கள் தயாராகவே இருக்கிறோம்." என்று கிறிஸ் மின்ஸ் வெற்றி பெற்றவுடன் தனது உரையில் குறிப்பிட்டார். இரண்டு வருடங்கள் தொடர்ந்து சளைக்காமல் வெற்றி பெற்றுவிடுவோம் என்ற நம்பிக்கையில் செயலாற்றிய அவரது அயராத உழைப்புக்கு கிடைத்த பரிசு எனினும், அவரின் இந்த வெற்றிக்கு எதிர்த்தரப்பினருக்குத்தான் நன்றி சொல்லவேண்டும் .




மீண்டும் பொறுப்பேற்க வாய்ப்பிருக்கிறது என்று கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னே பலரும் கருதிய டொம் பெரொட்டேட் தோல்வியடைந்திருக்கிறார் .

பொதுவாக NSW மாகாணத்தை நான்கு அமைப்புகள் ஆட்சி செய்கின்றன என்பார்கள். மத்திய அரசு ,மாகாண அரசு, உள்ளாட்சி அமைப்பு இதற்கெல்லாம் மேலே இருப்பது பண பலம் பொருந்திய ClubNSW எனும் நிழலுலக அரசு என்பனவே அந்த நான்கு அமைப்புகளும். பெரொட்டேட் இந்த நிழலுலக அரசைத் துணிந்து எதிர்க்க முடிவு செய்தார். இதற்காகத் தேவைப்பட்ட ஆதரவு, அவரது கூட்டணிக் கட்சியினரிடேயே கிடைக்கவில்லை. ஓய்வு பெற்ற கட்சியின் முன்னணி நட்சத்திரங்கள் Geoff Lee (Parramatta ), Victor Dominello ( Ryde ), Brad Hazzard ( Wakehurst ), Shelley Hancock (South coast ), Kevin Conoly ( Riverstone) தேர்தலில் போட்டியிடாததும் ஒரு பின்னடைவு தான்.

தேர்தல் பிரசாரம் தொடங்கும் முன்பே கூட்டணிக் கட்சியினரிடம் ( லிபெரல் மற்றும் நஷனல் ) ஒரு சுணக்கம் இருந்தது. அவர்களே தாங்கள் தோல்வி அடைந்து விடுவோம் என்று முன்னரே தீர்மானித்து விட்டது போன்றே தோன்றியது. ஊழல் குற்றச்சாட்டுகளில் பதவி விலகிய முன்னாள் பிரீமியர் Gladys Berejiklian, John Barilaro போன்றவர்களால் மக்களிடம் இருந்த அதிருப்தியும், நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியுற்றதால் மத்திய அரசாங்கப் பிரதிநிதித்துவ ஆதரவு இன்றியும் தங்களது பிரசாரத்தை தொடங்கினர். ஒற்றை ஆள் இராணுவம் போன்று பெரொட்டேட் NSW மாகாணம் முழுவதும் வாக்குச் சேகரித்தார்.

மாறாகத் தொழிலாளர் கட்சியினரோ மிக எளிமையான பிரசாரத்தைச் செய்தனர். அவர்களின் முக்கியமான தேர்தல் வாக்குறுதிகள் மிக எளிமையான, மக்களை நேரடியாக ( இப்போதைய பிரச்சினைகள் )பாதிக்கும் விஷயங்களை மட்டுமே கவனத்திற் கொண்டனவாக அமைந்தன. சுங்கவரி குறைப்பு (Tolls), அரசாங்க, மருத்துவ,செவிலியர் ஊதிய உயர்வு, புதிய மருத்துவமனைகள் மற்றும் பள்ளிகள் கட்டுமானம் போன்ற பிரச்சினைகளில் மட்டுமே கவனம் செலுத்திய சரியான பிரசார அணுகுமுறை என்று தேர்தல் முடிவுகள் நிரூபிக்கின்றன. பிரதமர் அன்டனி அல்பனிஸ் பிரசாரத்தில் பங்கேற்றதும், முக்கியமான தொகுதிகளான Parramatta, Ryde, Penrith, Riverstone, Camden, East Hills, Monaro, South Coast என்பவற்றில் கூடுதல் கவனம் செலுத்தி வாக்குச் சேகரித்ததும் வெற்றியை எளிதாக்கியது. பெரொட்டேட்டின் தனியார் மயமாக்கம் (குறிப்பாக சிட்னி வாட்டர் ) குறித்தான பிரசாரம் நன்றாக வேலை செய்திருக்கிறது.

கடந்த தேர்தலை விட இந்தத் தேர்தலில் எண்ணிக்கையில் அதிகமான புலம்பெயர் மக்களின் (குறிப்பாக இந்தியா, சீனா, இலங்கை மற்றும் பிற ஆசிய நாடுகள்) வாக்குகளை கவர்வதற்கு தேவையான விஷயங்களே (புதிய பள்ளிக்கூடம், மருத்துவமனை, ஆசிரியர் பற்றாக்குறை, முதல் வீடு வாங்குபவருக்கு முத்திரை தீர்வை வரி நீக்கம்) இந்த வெற்றியைத் தீர்மானித்தன என்றால் மிகையில்லை. அதிகார வெளிச்சம் பணக்கார சிட்னியின் கிழக்கிலிருந்து மேற்குத் திசை நோக்கி நகர்ந்திருப்பது ஆரோக்கியமான விஷயம் தான். ஆனால் பெரொட்டேட் தேர்தல் வாக்குறுதிகளான குழந்தைகள் வருங்கால வைப்புநிதி ( Kids Future fund), சூதாட்ட பண அட்டை கட்டாயமாக்கல் (Cashless Card) போன்றன நிறைவேற வாய்ப்பு இல்லை என்பது சிறு வருத்தமே.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில் இந்தத் தேர்தல் மிக நளினமான, ஆரவாரமின்றி இரு பொறுப்பான தந்தையர்களுக்கு இடையே நடந்த ( டொம் Vs கிறிஸ் ) போட்டியாகும். " இந்தத் தேர்தல் பிரசாரம் தனித்துவமாக, மரியாதை மற்றும் நாகரிகத்தின் மாதிரியாக இருந்தது என்பதை மறுக்க முடியாது. இரு கட்சிகளும் கீழ்மையான பாதையில் செல்லவில்லை. எந்த அரசியல் கட்சியும் மோசமான அடியை எடுக்கவில்லை" என்று கிறிஸ் மின்ஸூம் , "தேர்தல்கள் அசிங்கமாக இருக்கலாம், ஆனால் இந்தத் தேர்தல் உண்மையிலேயே சிறந்தநிலைக்கான ஒரு பந்தயம் என்று நான் நம்புகிறேன். இந்தத் தேர்தல் ஒரு உண்மையான கருத்துப் போர் - அதன் பொருட்டே எங்கள் அரசியல் அதன் சிறந்த நிலையில் உள்ளது " என்று டொம் பெரொட்டேட்டும் கூறியதிலிருந்தே நடந்து முடிந்த தேர்தல் ஒரு சிறந்த அரசியல் போட்டியை வரலாற்றில் காண்பதற்கான வாய்ப்பை வழங்கியிருந்தமை புலனாகும். தேர்தலில் எப்போதும் சிறந்தவரே வெற்றி பெறுவார் என்று சொல்ல முடியாது. டொம் பெரொட்டேட்டுடன் (தொடர்ந்து எட்டு ஆண்டுகளுக்கு மேல் அமைச்சர் மற்றும் ப்ரீமியராக பணியாற்றியமை) ஒப்பிடுகையில் கிறிஸ் அவர்களுக்கு போதிய முன்னனுபவம் கிடையாது. பாபா திரைப்படத்தில் ரஜினிக்கு பாபா வரமளித்த சமயத்தில் அவரது சீடர் ஒருவர், "பாபா நீங்கள் கொடுத்தது வரமா, சாபமா ? " என்று கேட்பார். அதற்கு குரு "பரீட்சை" என்று பதிலளிப்பார். அதுபோன்று NSW மக்கள் கிறிஸ் மின்ஸின் தொழிலாளர் கட்சிக்கு அளித்த இந்த வெற்றி கூட ஒரு பரீட்சை என்றுதான் இப்போது சொல்ல முடியும்.

Sai Shree Foods
Pty. Ltd.

AUSTRALIA - CANADA - INDIA

REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:06 அதிர்வு: 70 சித்திரை 2023 தொ.பே:1800 960 162

# தொடர்ச்சியான போராட்டங்களே அவசியம்

சித்தார்த்தராக இருந்த இளவரசன் வெள்ளரசு மரத்தின் கீழ் ஞானம் பெற்று, பற்றெல்லாம் துறந்து, பரிநிர்வாணம் அடைந்ததால் கௌதம புத்தராக மாறினான். புத்தர் தந்த பௌத்தம் என்ற கோட்பாடு , உலகில் உள்ள எல்லாவற்றையும் துறந்து, நிலைபேறான இன்பத்தை அடையும் வழியைச் சொல்வதே. மாறாக அதுவொரு மதமன்று. எந்த மதமும் வேண்டாமென்றுதான் சித்தார்த்தர், காட்டுக்குள் போய் வாழத் தொடங்கினார். ஆனால், புத்தரைப் பின்பற்றிய எவருமே– அசோகச்சக்கரவர்த்தி உட்பட – பௌத்தம் சொல்லும் உண்மையான பொருளை விளங்கிக் கொள்ளவில்லை. அசோகச்சக்கரவர்த்தி கூட போரை வெறுத்து பௌத்தத்தை தழுவினாலும், போருக்கு பதிலாக மதத்தை ஆக்கிரமிப்புக் கருவியாக மாற்றவேசெய்தான். அதனால் தான் உலகெங்கும் தன் பிரதிநிதிகளை அனுப்பி அங்கெல்லாம் பௌத்தத்தை வலிந்து பரப்பி, தன் ஆக்கிரமிப்பை இன்னொரு விதத்தில் அசோகன் தொடர்ந்தான். அசோகனின் வழிவந்ததாலோ என்னவோ, இலங்கையிலும் பௌத்தம் அன்பின் மதமாக அல்லாமல் ஆக்கிரமிப்பின் மதமாகவே செயற்பட்டு வருகின்றது.

அந்த ஆக்கிரமிப்பின் மிகச் சமீபத்திய உதாரணம் வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய அழிப்பு. எங்கெல்லாம் மின்சாரத்தூண்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் காலைத் தூக்கும் நாயைப்போல, எங்கெல்லாம் தமிழர்களின் தொன்மையான இடங்கள், தலங்கள், கட்டடங்கள், சிற்பங்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் 'அது முன்னர் விகாரை இருந்த இடம்' என்று கச்சையைக் கட்டிக்கொண்டு தொல்லியல் திணைக்களம் வந்திறங்கிவிடும். குறித்த தொன்மையான பகுதியை ஆட்கள் நுழையமுடியாத பகுதியாக அறிவித்துவிட்டு, அங்கு பௌத்த எச்சங்கள் அகழ்வின் போது கண்டுபிடிக்கப்பட்டதாகக் கதை விட்டு, விகாரைகளை புதிதாகக் கட்டிமுடித்து, பௌத்தத்தின் ஆக்கிரமிப்புக்கு நிலப்பாவாடை விரிப்பதே இலங்கையில் தொல்லியல் திணைக்களத்தின் தலையாய பணியாக மாறிவிட்டது. அந்தவேலையின் ஆரம்பம் தான் வெடுக்குநாறிமலையிலும் தொடங்கியிருக்கிறது. அங்கு தமிழ் மக்களின் தொன்மையான இருப்பை ஆதாரபூர்வமாக வெளிப்படுத்தும் சான்றுகள் இருப்பதைக் கண்டுகொண்ட தொல்லியல் திணைக்களம், அவற்றுக்கு பௌத்தமுலாம் பூசி, அது சிங்களவர்களுக்கு உரித்தான பகுதி என்று காட்ட பெரும் பிரயத்தனம் செய்கிறது. வெடுக்குநாறிமலைச் சிவனுக்கு பூசை செய்து, வழிபட்டுவந்த மக்களுக்கு அங்கு செல்ல நீதிமன்றத்தின் ஊடாக தடை விதிக்கப்பட்டது. இதனால் யாருமற்றுபோன ஆதிசிவன் ஆலயத்தை சிதைக்கும் கைங்கரியம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அங்கிருந்த லிங்கம் பெயர்த்தெடுக்கப்பட்டு புதருக்குள் வீசப்பட்டிருக்கிறது. சூலம் களவாடப்பட்டுவிட்டது. ஏனைய விக்கிரகங்களும் அடித்து நொருக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சியாக ஒரேபாணியில், இவ்வாறு தமிழ் மக்களின் மரபார்ந்த வழிபாட்டிடங்களை பௌத்தமயமாக்கும் நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டிய கட்டாயத்தை அண்மைக்காலச் சம்பவங்கள் உணர்த்துகின்றன. குருந்தூர் மலையிலும் இதேபோன்றுதான் ஆக்கிரமிப்பை மேற்கொண்ட தொல்லியல் திணைக்களம், நீதிமன்றத்தின் உத்தரவையும் மீறி அங்கு விகாரையைக் கட்டி முடித்திருக்கிறது. இவ்வாறு நீதிமன்ற உத்தரவை மதிக்காமல் விகாரை கட்டப்படுவதை எதிர்த்து ஜனநாயகவழியில் போராடிய மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர். அவர்கள் மீது வழக்குத்தொடரப்பட்டுள்ளது. ஆனால் நீதிமன்ற உத்தரவை மீறி விகாரையைக் கட்டியவர்கள் மீது நீதித்துறையின் சுண்டுவிரல் கூட படவில்லை. இதுதான் இலங்கையின் நீதித்துறையின் ஓரவஞ்சனை. எனவே இலங்கையின் அரசோ, நீதித்துறையோ, திணைக்களங்களோ பௌத்தத்தின் பக்கம் தான் நிற்கின்றனவே தவிர நீதியின் பக்கமோ, உண்மையின் பக்கமோ நிற்கப்போவதில்லை. இதனையே வெடுக்குநாறிமலைச் சம்பவமும் தெள்ளதெளிவாகப் புரியவைத்திருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில், எமது எதிர்ப்பை பலமாகக் காட்ட வேண்டும். வெறுமனே ஒருநாள் தொண்டைகிழியக் கத்தி, கோஷம் போட்டு விட்டு அடங்கினால், திரும்பவும் சிங்களம் தன் வேலையைக் காட்டவே செய்யும். எனவே தொல்லியலின் பேரால் நிகழும் அநீதிக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வரை தொடர்ச்சியான ஜனநாயகப்போராட்டங்களை தமிழர்கள் முன்னெடுக்கவேண்டியது காலத்தின் கட்டாயம்.

# தொல்லியல் திணைக்களம்

# அபகரிக்கும் தமிழர் நிலம்



ஜெரா

இலங்கையில் தமிழர் தாயகப் பகுதிகளை ஆக்கிரமிக்க பல தரப்புக்கள் போட்டியிட்டுக்கொண்டிருக்கின்றன. இந்தியா, சீனா, அமெரிக்கா, யப்பான் என நாளுக்குநாள் தமிழர் தாயகப் பகுதிகளுக்கான போட்டித் தன்மை அதிகரித்துச் செல்கின்றது. இது போதாதென்று இலங்கை அரசு தன் பெரும்பான்மை மேலாதிக்கத்தை வடக்கு, கிழக்கு பகுதிகளில் நிலை நாட்டும்பொருட்டு பல்வேறு வகையான திணைக்களங்கள் ஊடாக நில அபகரிப்பை மேற்கொண்டு வருகின்றது. முப்படையினர், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை, வனவளப் பாதுகாப்புத் திணைக்களம், நீரியல் வளத் திணைக்களம், பௌத்த பிக்குகள் என அதனது தொகையும் மிக அதிகம்.

தமிழர் தாயகப் பகுதிகளை ஆக்கிரமிக்கும் நடவடிக்கைகளில் மேற்கண்ட அரச கட்டமைப்புகள் ஈடுபடும்போது தமிழர்கள் சுயமாகத் திரண்டெழுந்து அறவழிப் போராட்டங்களை நடத்தி ஓரளவிற்காவது நிலத்தைக் காப்பாற்றிக்கொள்கின்றனர். இராணுவ அபகரிப்புக்கு எதிராகப் போராடிக்கொண்டிருக்கும் கேப்பாப்பிலவு மக்கள் ஒரு சில கிராமங்களையாவது மீட்டிருக்கின்றனர். இராணுவ உயர் பாதுகாப்பு வலயமாக இருக்கும் வலிகாமம் வடக்கு பகுதியை போராடிப் போராடியே மீட்டுவருகின்றனர். அதேபோல முல்லைத்தீவில் பகுதிபகுதியாக தமிழர்களது வாழ் நிலங்களை அபகரித்து வந்த மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் அத்துமீறல்களும் பொதுமக்களது போராட்டங்களையடுத்து கட்டுக்குள் வந்திருக்கின்றன. எனவேதான் இலங்கை அரசுக்கு தமிழர்களது நிலங்களை தொடர்ந்தும் அபகரிக்க புதிய புதிய திணைக்களங்கள் அவசியப்படுகின்றன. அதற்காகத் தற்போது தெரிவு செய்யப்பட்டிருப்பதே தொல்லியல் திணைக்களம் .

இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை விட மோசமான சட்டங்களை உடையதாக வடிவமைக்கப்பட்டிருக்கும் தொல்லியல் திணைக்களமானது வெளிப்படையாகவே பௌத்த சாசனத்தை மாத்திரம் பேணிப்பாதுகாப்பதற்காக செயற்படும் அரச கட்டமைப்பாகத் தன்னை அறிமுகம் செய்துகொள்கிறது. தொல்பொருள் ஒன்றைச் சிதைத்தாலோ, அல்லது அத்துமீறி நுழைந்தாலோ பிணை வழங்க முடியாதளவுக்கு இறுக்கமான சட்ட நியாயத்தைக் கொண்டிருக்கும்

(07ஆம் பக்கம் பார்க்க)

## வாசகர் களம்

எரொலியில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் குறித்து வாசகர்களின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன. காத்திரமான கருத்துக்கள் பிரசுரிக்கப்படும். அதுமட்டுமின்றி எதிரொலி பேசாத சமூக கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.

நன்றி

**ஆசிரியர்பீடம், எதிரொலி**



editor@ethiroli.com
PO Box 6313, Dandenong
Victoria 3175




## தொல்லியல் திணைக்களம்

# அபகரிக்கும் தமிழர் நிலம்

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

இத்திணைக்களமானது வடக்கு, கிழக்கு பகுதிகளில் பல்லாயிரம் ஏக்கர் பொதுமக்களது காணிகளை அபகரித் திருக்கிறது.

இலங்கையில் பல்வேறு மதங்களைப் பின்பற்றும் சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர் எனப் பல்லின, பல்மத மக்கள் வாழ்ந்து வரினும், தனியே பௌத்த விகாரை களை மட்டும் தேசிய மரபுரிமை சின்னங்களாகப் பிரகடனப்படுத்தி, அதனைப் பாதுகாக்கும் வேலையை செய்துவருகின்ற தொல்லியல் திணைக் களத்தின் அண்மைய வேலைத்திட்டம், வடக்கு, கிழக்கு பகுதிகளில் பௌத்த விகாரைகளை நிறுவுதல், அதற்குத் தேவை யான காணிகளை அபகரித்தல் ஆகி யனதான். போர் நிறைவுற்ற கையுடன் இராணுவத்தின் துணையுடன் வடக்கு, கிழக்கு பகுதிகளுக்குள் நுழைந்த தொல்லியல் திணைக்களத்தினர் பல நூற்றுக்கணக்கான பௌத்த விகாரை களை வடக்கு, கிழக்கு பாகங்களில் அடையாளப்படுத்தியிருக்கின்றனர். அவ்வளவு இடங்களையும் வர்த்தமானியில் பதிவேற்றி வைத்துவிட்டு, இப்போது அவ்விடங்களை ஒவ்வொன்றாக ஆக்கிர மித்து பௌத்த விகாரைகளை அமைத்து வருகின்றனர்.

இந்தத் திட்டமிட்ட ஆக்கிரமிப்பு எப்படி நடக்கிறதெனில், வடக்கு, கிழக்கில் எங்காவது ஒரு காட்டுக்குள், அல்லது குடிமனைப் பகுதிக்குள் சுட்ட செங்கற்கள், சாசனங்கள், கட்டட இடிபாடுகள் காணப்பட்டால் எவ்வித ஆழமான ஆய்வுகளும் மேற்கொள்ளாது முதல் நடவடிக்கையாக அது பௌத்த விகாரையோ, பௌத்த வழிபாட்டிடமோ இருந்த இடம் என வர்த்தமானி வெளி யிட்டு விடுகிறார்கள். அந்த வர்த்தமானியை வைத்துக்கொண்டு பௌத்த சாசன அமைச்சு, வெளிநாட்டு நிறுவனங்கள், பௌத்த மதப் பற்றாளர்கள், அரசியல்வாதிகள் போன்றோரிடம் நிதி அனுசரணையைப் பெற்றுக்கொள்ளும் பௌத்த பிக்கு ஒருவர், குறித்த பகுதிக்கு முதலில் வந்து குடியேறி விடுவார். உள்ளூர் மக்கள் அவருக்கு எதிர்ப்பு வெளியிட்டதும் அவரைப் பாதுகாக்க இராணுவம், பொலிஸ், புலனாய்வாளர்கள் என ஒரு கூட்டமே துணைக்கு வந்து நிற்கும். இரவு பகலாக அந்தப் பிக்குவைப் பாதுகாத்துக்கொண்டிருப்பர். பிக்கு குடிகொண்டிருக்கும் பகுதிக்கு இரவு பகலாக ஓடித்திரியும் கனரக வாகனங்களில் என்ன கொண்டு போகிறார்கள், என்ன வைக்கிறார்கள் என யாருக்கும் தெரி யாதவாறு பார்த்துக்கொள்ளப்படும். பொதுமக்கள் யாராவது எதிர்ப்பை வெளியிட்டுப் போராடத் தொடங்கினால் பல்வேறுபட்ட அச்சுறுத்தல்களை அவர்கள் எதிர்கொள்வர். பின்னர் அவ்விடத்திற்கு நல்ல பிள்ளையாக அழைக்கப்படும் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள், தம் வேலையைத் தொடங்குவர். அப் பகுதியில் இரவு பகலாக தொல்லியல் அகழ்வுப் பணிகளில் இராணுவம் ஈடுபடும். அகழ்வாய்வின் முடிவில் புத்தரின் சிலை, சந்திர வட்டக்கல்லின் உடைந்த துண்டுகள், பௌத்த கட்டட எச்சங்கள் போன்றவை மீட்கப்பட்டிருக்கும். தொல்லியல் ஆய் வின் மிகப் பிரதான கோட்பாடான ஒரு அகழ்வாய்வானது இயற்கை மண் வரையில் மேற்கொள்ளப்பட்ட பின்னரே ஆய்வு முடிவுகள் வெளிப்படுத்தப்படல் வேண்டும் என்கிற எவ்வித முறையியல்களும் பின்பற்றப்படுவதில்லை. எப்போதோ புதைத்து வைத்த புத்தர் சிலைகளை மீள எடுப்பதுபோல அதனை எடுத்தவுடன் ஆய்வுகள் முடிவுக்கு வரும். அவற்றைக் கண்டுபிடித்ததும் ஆய்வுகள் உடனடியாக நிறுத்தப்பட்டு, சிங்கள ஊடகங்களுக்கு மாத்திரம் அவை வெளிப்படுத்தப்படும். அந்தக் கட்டுரைகளில் தொல்லியல் திணைக்களத்தினர் அதற்கு ஒரு சிங்களப் பெயரும் வைத்து அவ்விடத்தில் இருந்த பௌத்த எச்சங்கள் அனுராதபுர காலத்துக்கு சமனானது என்கிற கதையையும் எழுதி விடுவர். அது பெரும் வரலாற்றுச் செய்தியாக சிங்கள ஊடகங்களில் வலம் வரும்.

அதற்குப் பின்னர் தெற்கிலிருந்து பொறுப்பான அரசியல்வாதிகள் இராணுவத்தினர் சகிதம் வருகைதந்து புதிய புத்தர் சிலைகளை பிக்குவுக்கு அன்பளிப்புச் செய்து வழிபடுவர். அந்தச் சிலைகள் சிறியளவிலான கண்ணாடிப் பேழைக-ளில் அங்கு வைக்கப்படும். அதனைத் தொடர்ந்து தெற்கிலிருந்து சிங்கள மக்கள் வெள்ளை ஆடையுடுத்தி, அல்லி மலர் கையிலேந்தி வரிசையாக வந்து வழிபடுவர். சாதுவின் கால்களில் விழுந்து வணங்கி ஆசிபெற்றுச்செல்லுவர். இதற்கெல்லாம் பிறகு எல்லாப் பக்கங்களிலிருந்தும் கொட்டும் பணத்தைக் கொண்டு வானுயர புத்த விகாரை ஒன்றை அங்கு குடியிருக்கும் பௌத்த பிக்கு, தொல்லியல் திணைக்களம், இராணுவம் என்பவற்றோடு இணைந்து கட்டிமுடிப்பார்.

இதற்கிடையில் அந்தப் பகுதியின் பூர்வீக மக்கள் ஏதாவது போராட்டம் நடத்தி, அங்கு பௌத்த விகாரை அமைக்க முடியா தென நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தாலும் கூட அதனை பௌத்த பிக்குவோ, தொல்லியல் திணைக்களமோ கணக்கிலும் எடுத்திருக்கமாட்டாது. உதாரணமாக, குருந்தூர்மலை ஆதி ஐயனார் ஆல யத்தை அழித்து கட்டப்பட்டிருக்கும் பௌத்த விகாரையின் கட்டுமானங்களை உடனடியாக நிறுத்தும்படி முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றம் தீர்ப் பளித்தது. ஆனால் அந்தத் தீர்ப்பை கடுகளவு கூட மதிக்காமல் பௌத்த விகாரையை கட்டிமுடித்தது தொல்லியல் திணைக்களம். இதேபோல பிணை வழங்கமுடியாத தொல்லியல் சட்டப் பிரிவாக இருக்கும் 'தொல்லியல் சின்னங்களை சிதைக்கக்கூடாது 'என்கிற சரத்தை தொல்லியல் திணைக்களம் எப்படி வேண்டுமானாலும் மாற்றிக்கொள்ளலாம். அகழ்வில் காணப்படும் தொல்லியல் சின்னம் தமிழர்களுடையதாக இருந்தால், சிதைக்கலாம். உடைத்தெறியலாம். கவனிப்பாரற்றுக் கைவிடலாம். அதே வேளை பௌத்த எச்சமாக இருந்தால் அதனைப் புனிதமாகப் பாதுகாக்க வேண் டும். தம் தேவைக்காக அந்தச்சின்னத்தை எங்கு வேண்டுமானாலும் பிடுங்கிச்சென்று மீள நடமுடியும்.

இவ்வாறு பௌத்த விகாரையை நிறு விய பின்னர், பௌத்த விகாரையில் தங்கியிருக்கும் பௌத்த பிக்குவுக்கு தானமளிக்க 40 வரையான சிங்களக் குடும்பங்களை பிக்கு குடியேற்றுவார். முறைப்படியான எவ்வித முன் அனு-மதிகளும் பிரதேச செயலகங்களில், காணி அலுவலகங்களில் பெறாமல் இந்தக் குடியேற்றம் இடம்பெறும். அவர்களுக்கான வீட்டு வசதிகளை தேசிய வீடமைப்பு அதி-கார சபை வழங்கும். அதுவும் வவுனியா மாவட்டத்தில் இடம்பெறும் இத்தகைய குடியேற்றத்திட்டத்திற்கு, வவுனியாவை சேர்ந்த அரச திணைக்களங்கள்தான் உதவவேண்டுமென்றில்லை. அனுராதபுர மாவட்டத்தில் இயங்கும் அரச நிறுவ னங்கள் வவுனியாவுக்கு வந்து வீட்டுத்திட்ட, வாழ்வாதார வசதிகளைச் செய்துகொடுக்கும். அவ்வாறு குடியேற்றம் செய்யப்பட்டுள்ள காணிக்கு உரித்தாக ஒரு தமிழர் இருந்தால் அந்த விடயம் யாராலும் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது. அந்த நிலத்தில் வேளாண்மையை இராணுவம் செய்து, நெல்லாக கொண்டுபோய் குடியேற்றப்பட்ட சிங்கள மக்களின் வீடுகளுக்கு வழங்கும். இத்தனைக்கும் அவ்வாறு குடியேற்றப்பட்ட சிங்கள மக்களின் வீடுகளில் ஒரு வேளை தேநீரைத் தானும் அந்தப் பௌத்த பிக்கு அருந்தியிருக்க மாட்டார். அவருக்கான சகல வசதிகளையும், இராணுவமும் அவருக்கு அருகில் உள்ள அரச- சிங்கள நிறுவனங்களும் செய்துகொடுக்கும்.

அதற்கு அடுத்து பௌத்த விகாரையின் வருமானத்துக்கென பல நூற்றுக்கணக்கான ஏக்கர் காணியை பிரதேச செயலகத்திடம் பௌத்த பிக்கு கோருவார். அது யாரி னுடைய காணியாக இருந்தாலும் சரி, அடர் வனமாக இருந்தாலும் சரி உடன-டியாகவே வழங்கவேண்டும். இல்லையேல், அந்தப் பிரதேச செயலாளரின் பதவி ஊஞ்சலாடும். இதற்குப் பயத்திலேயே பலர் பிக்குவின் கடிதத்தைக் கண்டால் அதனை வாசிக்காமலேயே கையெழுத்து வைத்துக்கொடுத்துவிடும் சம்பவங்களும் இங்கே நடக்கின்றன. அத்தோடு அந்தக் காணிகளுக்குள் உரித்துள்ள தமிழர்கள் நுழைவதற்குக்கூடத் தடைவிதிக்கப்படும். இப்படியாக வடக்கு, கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குள் அமைக்கப்படும் ஒவ்வொரு பௌத்த விகாரையும் பல ஆயிரக்கணக்கான தமிழர் நிலங்களை அபகரித்திருக்கிறன. இந்த நிலங்களில் இப்போதைக்கு குடியேற்றம் செய்வதற்குக் கூட சிங்களவர்களின் சனத்தொகை போதாது. ஆனால் சனத்தொகையை மீறிய அளவுக்கு தொல்லியல் திணைக் களத்தின் தலையீட்டோடு அபகரிக்கப் பட்டு வருகின்றன. சிங்களமயப்பட்டு வருகின்றன.

# கின்னஸ் நாயகன் 'பிரித்திஷ்'!



**சா**தனையாளர்களை எப்போதும் வெளியே தேடும் நாம், எங்களுக்குள்ளேயே பல சாதனையாளர்கள் சத்தமில்லாமல் சரித்திரம் படைத்துக் கொண்டு இருப்பதை அறியாமலே இருந்துவிடுகிறோம். ஆனாலும் ஆயிரம் கைககள் மறைத்தாலும் ஆதவன் மறைவதில்லையே. அப்படி தனது உலக சாதனையால் எல்லோரையும் ஆச்சரியப் படவைத்திருக்கிறார் வெறும் 13 வயதேயானா தமிழ்ச் சிறுவனான ஏ .ஆர். பிரித்திஷின். சாதனைக்கு வயது ஒரு தடையே இல்லை என்பதை மீண்டும் ஒரு முறை ஊர்ஜிதப்படுத்திய பிரித்திஷின் சாதனை என்ன தெரியுமா? வெறும் “60” வினாடிகளில் டிரம்ஸ் வாத்தியத்தில் உலகிலேயே அதிகபட்ச தாளத்தட்டுகளை (Drumbeats) வாசித்து கின்னஸ் உலக சாதனை படைத்தது தான். சிட்னியைச் சேர்ந்த இந்த தமிழ் பேசும் சிறுவனைப் பார்த்து தமிழ் கூறும் நல்லுலகம் பெருமைப்படுகின்றது.

எதிரொலிக்காக கின்னஸ் நாயகன் பிரித்திஷ் வழுங்கிய பிரத்தியே நேர்காணல் இது.

**நேர்கண்டவர் : நெ செ பரத்**

**கேள்வி: வணக்கம் பிரித்திஷ், உங்களைப் பற்றியும் உங்கள் குடும்பத்தைப் பற்றியும் எதிரொலி வாசகர்களுக்காக அறிமுகம் ஒன்று தரமுடியுமா?**

பதில்: எனக்கு 13 வயதாகிறது, நான் நியூ சவுத் வேல்ஸ் மாகாணத்தில் உள்ள எடமுன்சொன் பார்க்கில் உள்ள புனித பிரான்சிஸ் கத்தோலிக்க பள்ளியில் எட்டாம் வகுப்பு படிக்கிறேன். அம்மா - திருமதி ஆர்த்தி ராஜேஷ், அப்பா - திரு ராஜேஷ் குமார் மற்றும் தங்கை - ஸ்ரேயா . இவர்களை உள்ளடக்கிய எங்கள் குடும்பம் கடந்த 15 வருடங்களாக ஆஸ்திரேலியாவில் வசித்து வருகிறது. எங்கள் பூர்வீகம் தமிழ்நாட்டில் உள்ள சென்னை மாநகரம்.



**கேள்வி: நீங்கள் எப்போது கின்னஸ் சாதனையைப் படைத்தீர்கள்?**

பதில்: 16 டிசம்பர் 2021 அன்று டிரம்ஸ் வாத்தியத்தில் டிரம்ஸ் குச்சிகளை (Drumsticks) கொண்டு 60 வினாடிகளில் 2370 தாளத் தட்டுகளை (Drum beats) வாசித்து கின்னஸ் உலக சாதனை படைத்தேன். இதன் மூலம் இதற்கு முன்னர் சென்னையை சேர்ந்த சித்தார்த் நாகராஜன் என்பவர் 60 வினாடிகளில் 2109 தாளத் தட்டுகள் வாசித்த சாதனையை முறியடித்தேன். இந்தச் சாதனையை புரியும்போது எனக்கு வயது 10.

**கேள்வி:இந்தச் சாதனையைப் புரிய நீங்கள் எந்த விதமான பயிற்சிகளை மேற்கொண்டீர்கள் ?**

பதில்:இந்த உலக சாதனைக்கு முயற்சிக்கலாம் என்று ஏப்ரல் 2021 காலகட்டத்தில் முடிவு செய்தோம். அதன் பொருட்டு பல்வேறு விதமான டிரம்ஸ் கருவிகளிலும் மற்றும் தரை, தலையணை, இருக்கைகள் என பல தரப்பட்ட மேற்பரப்புகளிலும் (Surface) தினசரி வாசித்துப் பழகினேன். தாளத் தட்டுகளை கணக்கிடும் “Drumometer” துணையுடன் இந்தப் பயிற்சியைச் செய்தேன்.

**கேள்வி: நீங்கள் இந்தச் சாதனையைப் படைக்க முடியும் என்ற நம்பிக்கைக்கான வித்து எங்கிருந்து தொடங்கியது?**

பதில்: சிறுவயது முதலே எனக்கிருந்த டிரம்ஸ் வாசிக்கும் ஆர்வத்தைக் கண்ட எனது பெற்றோர், எனக்குப் பயிற்சியில் கவனம் செலுத்தும் சூழலை ஏற்படுத்திக் கொடுத்தனர். அத்தோடு நில்லாமல் என்னைப் பல்வேறு இசைப் பயிற்சி வகுப்புகளில் சேர்ப்பித்து எனது திறமையை மெருகேற்றினர். அவர்களுடைய முயற்சியின் பலன் தான் நான் இன்று உங்கள் முன் ஒரு சாதனையாளனாக நிற்கிறேன். எளிதில் கிடைக்காத ’டிரினிட்டி’ இசைக் கல்லூரியின் படிப்புகளில் வெற்றிபெற்ற உடன் நாங்கள் அடுத்த சவாலாக இந்தக் கின்னஸ் சாதனையை முயற்சிக்க முடிவு செய்தோம். இது ஒரு கூட்டு முயற்சி என்றே சொல்லலாம்.

ஏப்ரல் 2021- இல் “Drumometer” கணக்கீட்டின் படி என்னால் வெறும் 200 முதல் 250 தாளத் தட்டுகளையே வாசிக்க முடிந்தது. இருப்பினும் விடாமுயற்சி, தினசரிப் பயிற்சி மற்றும் பெற்றோரின் ஊக்குவிப்பு இருந்தபடியால் நான் டிசம்பர் மாதத்துக்குள் 60 வினாடிகளில் 2400 தாளத் தட்டுகள் வாசிக்கும் அளவு தயாரானேன். குறிப்பாக எனது தங்கை நான் சோர்வடையும் போதெல்லாம் “அண்ணா எண்ணிக்கை பத்தாது, தொடர்ந்து வாசி” என்று என்னை உந்தினார் .

எந்த ஒரு வாத்தியத்தின் நேர்த்தியைக் கற்றுக்கொள்ளவும் நமக்கு ஒரு ஆசான் தேவைப்படுகிறார், அப்படி எனக்கு உறுதுணையாக இருந்த ஆசான் சென்னையை சேர்ந்த திரு .”டிரம்ஸ்” ஸ்ரீதர் அவர்கள் தான். வாத்தியத்தின் நேர்த்தியை மட்டுமின்றி இந்தச் சாதனையை நிகழ்த்தத் தேவையான நுட்பத்தையும் அவர் எனக்குக் கற்றுத்தந்தார். அவருக்கு நான் இந்த இடத்தில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து கொள்கிறேன்.

**கேள்வி: கின்னஸ் சாதனை புரிந்தாயிற்று. இனி உங்களின் அடுத்த கட்ட திட்டங்கள் என்ன?**

பதில்: இன்னும் பல இசைப் பட்டப்படிப்புகளையும், பயிற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் அதற்கும் மேலாக தன் மனதுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய இந்த டிரம்ஸ் வாத்தியத்தை தினசரி வாசித்துக்கொண்டே இருக்க வேண்டும்.

**கேள்வி: இந்த வகையான கின்னஸ் சாதனையை முயற்சிக்க விழைபவர்கள் எந்த விதமான செயல்முறைகளை கின்னஸ் நிறுவனத்தோடு செய்யவேண்டும்?**

பதில்: (இதற்குப் பிரித்திஷின் பெற்றோரே பதிலளித்தனர்)

மொத்தமாக 6-8 வாரங்கள் வரை எடுக்கக்கூடிய இந்த செயல்முறையின் (Process) தொடக்கம் கின்னஸ் நிறுவனத்தை தொடர்பு கொள்ளவது முதல் அவர்கள் தரும் ஆவணங்களை (Paper work) சமர்ப்பிப்பதில் தொடங்கி இறுதிக் கட்டமாக இந்தச் சாதனையை நிகழ்த்தும் அரங்கமைப்பு (studio), ஒலிப் பொறியாளர்கள் (Sound engineers), நேரக்காப்பாளர்கள் (Time keepers) என அனைவரையும் ஒருங்கிணைத்து மீண்டும் கின்னஸ் நிறுவனத்திடம் ஒப்புதல் பெறுவதில் முடிகிறது . இதற்கு சுமார் “10,000” வெள்ளிகள் செலவிட்டோம்.

*******

அமைதியிலும் தன்னடக்கத்திலும் ஏ. ஆர் .பிரித்திஷின் வடிவில் நான் “ஏ. ஆர். ரகுமானை” கண்டேன்.

தன்னால் இயன்றதையும் சில சமயங்களில் இயலாததையும் கூட தமது குழந்தைகளுக்காக அமைத்து தரும் ஒவ்வொரு பெற்றோரின் சாதனையும் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறாத உலக சாதனைகளே.

சாதனையாளர்களை அடையாளம் கண்டு அவர்களுக்குத் தேவையான அங்கீகாரங்களை வழங்குவது சமூகத்தின் பொறுப்பு.



பிரித்திஷ் இசைக் கருவிகளை தொடர்ந்து வாசித்து, இவர் பெற்றோரின் இசைக்கனவை நனவாக்க இன்னும் பல இமாலய சாதனையை அவர் படைப்பார் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

எதிரொலியின் வாசகர்கள் சார்பாக நான் செல்வன். பிரித்திஷ்க்கு வாழ்த்துக்களை சொல்லி விடைபெற்றேன்

அடுத்த சாதனையாளர் உங்கள் வீட்டிலும் இருக்கக்கூடும்.


2AUTOMATEANYTHING
ITS YOUR TIME TO TRANSFORM IN TO A TALENTED
SOFTWARE ENGINEER IN JUST 6 MONTHS !!
JOB READY & INTERNSHIP TRAINING
GUARANTEE 100% GUARANTEE
2AutomateAnything, carefully designed this training for your career transformation !! We have done IT before for candidates from non-IT background and career breaks to transform their career in to IT with great salary ! Its your turn now !!
We offer :
Indepth Training & Experience
Hands on project experience
A great opportunity to get back to IT work
100% Placement Assistance
Training Streams :
Robotic Process Automation
Software Testing - Manual
Software Testing - Automation
Data Analyst & Business Intelligence
UiPath Partner
REGISTERED
FREE TRIAL
SCAN ME
www.2automateanything.com/services/education/professional-transform-program
1300 032 566
+61 478 248 476
www.2automateanything.com


MCN Cakes
Sri Lankan Cakes, Sweets & Short Eats in Dandenong Plaza
Cakes
Cupcakes
Macarons
Finger Foods
Ethiroli Special Offer
10% OFF
Custom Cakes
*valid till 28/02/23 , conditions apply
Custom Cakes:
Birthday Cakes
Wedding Cakes
Engagement Cakes
Authentic Sri Lankan
Ribbon Cakes
Chocolate Cakes
Eclairs and more....
Shop 105, Level 1,
Food court (near Westpac)
Dandenong Plaza
Dandenong
(03) 90188188
/ 0433662477
mcnlittlefoods
இது எங்கட கடை

# AUKUS எனும் வெள்ளை யானை


கார்த்திக்வேலு

அணுசக்தியில் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்களை வாங்குவதற்காக ஆஸ்திரேலியா அமெரிக்காவுடனும் பிரிட்டனுடனும் செய்து கொண்ட உடன்படிக்கை பரவலாக விவாதங்களைக் கிளப்பியிருக்கிறது. AUKUS எனப்படும் மூன்று நாடுகளுக்கு இடையே யான இராணுவ ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக 8 அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களை வாங்க ஆஸி ஒப்புக்கொண்டுள்ளது. பெரும் பொருட்செலவில் செயற்படுத்தப்படவிருக்கும் இந்தத் திட்டம் பல்வேறு விமர்சனங்களுக்கு உள்ளாகியிருக்கிறது .

சமீபத்தில் ஒரு பத்திரிகையாளர் கூட்டத்தில் பேசிய முன்னாள் ஆஸி பிரதமர் பால் கீட்டிங் இந்த ஒப்பந்தத்தை மிகத் தீவிரமாக விமர்சித்தது பரவலாகக் கவனத்தை கவர்ந்திருக்கிறது . நாட்டில் மருத்துவம் , கல்வி , விலைவாசி உயர்வு, உயரும் வீட்டுக்கடன் என்று பல்வேறு சவால்கள் இருக்கும்போது மொத்தம் கூ368 பில்லியன் டொலரை இது போன்ற இராணுவ பலத்தைப் பெருக்கச் செலவிடுவது அவசியம் தானா? என்ற கேள்வி எழுந்துள்ளது . முக்கியமான மருத்துவம் சார்ந்த செலவுகள் அதிகரிக்க ஆரம்பித்திருக்கின்றன் - மருத்துவமனை, மருத்துவர்கள், செவிலியர் என்று எல்லா வகையிலும் நமது பொதுச்சேவை திணறிக்கொண்டிருக்கிறது. இந்த பணத்தைக் கொண்டு எவ்வளவு செவிலியர்களை, ஆசிரியர்களை பணியில் அமர்த்தலாம் என்று நினைக்கும் போது , இவ்வளவு பெரிய இராணுவச் செலவை நியாயப்படுத்த தயக்கம் ஏற்படுகிறது.

காலநிலை மாற்றமும் உயர்ந்துவரும் விலைவாசியும் மக்களிடம் அன்றாட வாழ்க்கை சார்ந்த அழுத்தத்தை உருவாக்கி வருகின்றன. இவ்வளவு பணத்தை கப்பல்களை வாங்கச் செலவிடுவது என்பது ஏற்கனவே வரவு -செலவு தடுமாற்றத்தில் இருக்கும் சராசரி ஆஸி குடும்பத்தின் மீது கூடுதல் வரிச்சுமையாகவே விடியும். எதிர்காலத்தில் என்றோ ஒருநாள் சீனாவுடன் போர் வரலாம் என்னும் சாத்தியக்கூற்றை சமாளிக்க இன்று நம் முன் இருக்கும் முக்கியமான பிரச்சினைகளின் மீது நாம் போதிய கவனம் செலுத்தாமல் போகும் அபாயம் உள்ளது.

சீனா உண்மையாகவே ஆஸ்திரேலியாவை தாக்கி ஆக்கிரமிக்கும் அபாயம் உள்ளதா என்பதை நாம் உறுதியாகச் சொல்லிவிட முடியாது. ரஷ்யா -உக்ரைனை தாக்கி ஆக்கிரமிக்க நினைக்கும் என்பதை ஒரு வருடம் முன்பு நம்மில் எத்தனை பேர் எதிர்பார்த்திருப்போம் ? . அதுவும் அந்தப் போர் இவ்வளவு நாள் நீடிக்கும் என்பது அதைவிட எதிர்பார்த்திராத ஒன்று .

சீனாவும் தாய்வான் மற்றும் ஹொங்காங் விஷயத்தில் காட்டி வரும் கடுமையாக போக்கு நாம் அறிந்ததே . அது போக தென் சீனக் கடலில் புதிய இராணுவத் தளங்கள், பல பசுபிக் நாடுகளில் சீனாவில் வளர்ந்துவரும் செல்வாக்கு என்று பல விஷயங்கள் சீனா குறித்த அச்சத்தையும் அவநம்பிக்கையையுமே அளிக்கின்றன. இருந்தும் ஆஸி போன்ற ஒரு பெரிய நாட்டை சீனாவால் கைப்பற்றி ஆள முடியாது அதற்கான தேவையும் இல்லை என்ற பால் கீட்டிங் வாதிடுகிறார்.

ஆனால் உண்மை நிலைவரம் இந்த இரண்டு புள்ளிகளுக்கு இடையே தான் எங்கோ இருக்கிறது . சீனா ஒருவேளை ஆஸியை முற்றாக ஆக்கிரமிக்க எண்ணாமல் இருக்கலாம், ஆனால் வலுவற்ற ஒரு இராணுவச் சூழல் நம்மை பல்வேறு அரசியல் மற்றும் பொருளாதார நிர்ப்பந்தங்களுக்கு இயைந்து போகும்படி அழுத்தங்களுக்கு உட்படுத்தும் . உதாரணமாக நாளை சீனாவுக்கு எதிராக சர்வதேச அரங்கில் நாம் ஒரு தீர்மானம் கொண்டு வரவோ அல்லது கண்டனம் தெரிவிப்பதோ கூட மிகவும் யோசித்துச் செய்யவேண்டிய சூழல் உருவாகலாம்.

மற்றொருபுறம் நாம் வாங்க இருக்கும் நீர்மூழ்கிக் கப்பல்கள் நாம் உத்தேசிக்கும் இராணுவ வலிமையை நமக்கு அளிக்குமா என்பதும் கேள்விக்குரியதே . இந்தக் கப்பல்கள் எல்லாம் முழுமையாக இன்னும் முப்பது வருடங்கள் கழித்து தான் தமது ரோந்துப் பணியை ஆரம்பிக்கும். முப்பது ஆண்டுகள் நீளும் இந்த ஒப்பந்தத்தில் முதல் பத்து வருடங்களுக்கு அமெரிக்க, பிரிட்டிஷ் நீர்மூழ்கிகள் ஆஸி துறைமுகங்களுக்கு வந்து போகும். அடுத்த பத்து ஆண்டுகளில் அமெரிக்காவிடம், இடைக் காலப் பயன்பாட்டுக்காக மூன்று பழைய விர்ஜீனியா வகை நீர்மூழ்கிகளை வாங்க இருக்கிறோம் . இறுதிப் பத்தாண்டுகளில் தான் புதிய அணு நீர்மூழ்கிகள் நமக்கு கிடைக்க ஆரம்பிக்கும் . இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட தலைவர்கள் யாருமே 30 ஆண்டுகள் கழித்து அரசியலில் இருக்கப்போவது இல்லை எனும் போது , இந்த முடிவுக்கான தார்மீகப் பொறுப்பை யார் ஏற்பார்கள் என்பதும் விடையில்லாக் கேள்வியாக இருக்கிறது.

இந்த ஒப்பந்தத்தின்படி நாம் வாங்க இருக்கும் தொழில்நுட்பம் அமெரிக்கா மற்றும் பிரிட்டனின் கைவசம் உள்ளது. இந்தக் கப்பல்களை நாம் ஆஸியில் உருவாக்கினாலும் இது சார்ந்த தொழில்நுட்ப மற்றும் சேவைகளுக்கு நாம் இந்த இரண்டு நாடுகளையும் சார்ந்து தான் இருக்க வேண்டும் . இந்த ஒப்பந்தம் நம்மை அமெரிக்க மற்றும் பிரிட்டனுடன் ஒருவகையில் நீண்ட கால உறவில் கட்டிப்போடுகிறது (lock in).



இந்தத் திட்டத்தினால் ஆஸிக்கு பயன் இருக்கிறதோ இல்லையோ அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் பயன் உள்ளது. தங்களின் முக்கியமான எதிரியான சீனாவை ஆசியாவில் இருந்து எதிர்க்கும் ஒரு பிரதிநிதியாக நம்மை அவர்கள் பயன்படுத்துவார்கள். ஒருவகையில் அதற்கும் நாமே செலவு செய்து அந்த நீர்மூழ்கிகளை வாங்குவது என்பது நாமே காசு கொடுத்து கழுத்தில் சங்கிலி வாங்கி போட்டுக்கொள்வது போலதான் ஆகும்.

சரி ,இந்தக் கப்பல்களை வாங்கினால் அது நம்மை இராணுவ பலத்தில் சீனாவுக்கு நிகராக்குமா (power parity ) என்றால், இல்லை என்றே சொல்ல வேண்டும் .நாம் வாங்கப்போவது அணுசக்தியில் இயங்கும் நீர்மூழ்கிகள் தான் , அவையொன்றும் அணு ஆயுத வசதி கொண்ட நீர்மூழ்கிகள் அல்ல. சீனா அணு ஆயுத நீர்மூழ்கிகளை கொண்ட நாடு . ஏதோ ஒரு வகையில் நேருக்கு நேர் என்று வந்தால் சீனாவின் ஒட்டுமொத்த இராணுவ பலத்துக்கு நாம் ஈடுகொடுக்க முடியாது. எனவே இது நம்மை தாக்க நினைப்போருக்கு ஒரு எச்சரிக்கையாக (deterrant ) மட்டுமே நாம் பாவிக்க முடியும். அதாவது நம் வீடுகளின் முன் வைக்கும் “நாய்கள் ஜாக்கிரதை”அறிவிப்பை போல.

நமது இராணுவ பலத்தை வெளிப்படுத்தும் ஒரு சமிக்ஞையாகச் செயற்படவிருக்கும் ஒரு விஷயத்துக்கு நூற்றுக்கணக்கான பில்லியன் டொலரைச் செலவு செய்ய வேண்டுமா என்ற கேள்வியை நாம் மட்டுமல்ல எதிர்வரும் தலைமுறைகளும் கேட்க ஆரம்பிக்கும் . ஒரு தேசத்தின் இறையாண்மையயும் பாதுகாப்பையும் உறுதி செய்ய நாம் இராணுவத்திற்கு செலவழிக்கக்கூடாது என்று சொல்ல வரவில்லை , ஆனால் அதை சரியான விஷயங்களின் மீது தான் செலவழிக்கிறோமா என்பதே இங்கு கேள்வி .

சற்றுப் பின்நோக்கிப் பார்த்தால் ஆஸி எப்படி தனது நீர்மூழ்கிக் கப்பல் வாங்கும் திட்டத்தில் பல வகைகளில் தடுமாறி வந்திருக்கிறது என்பது புரியும் , 2009 இல் ஆஸி அரசு மொத்த 12 நீர்மூழ்கிகளை வாங்கவிருப்பதாக தனது திட்டத்தை அறிவித்தது . பிறகு டோனி அப்பாட் காலத்தில் ஜப்பானிய நீர்மூழ்கிகளை வாங்கலாம் என்ற பேச்சு அடிப்பட்டது. மால்கம் டெர்ன்புல் பதவி காலத்தில் பிரெஞ்சு நீர்மூழ்கிகளை வாங்கும் ஒப்பந்தம் கையெழுத்தானது , இதை முற்றாக ரத்து செய்துவிட்டு ஸ்காட் மோரிசன் AUKUS நீர்மூழ்கிகளை வாங்கலாம் என்று ஒப்பந்தம் செய்திருக்கிறார் .

தற்போது பயனில் இருக்கும் காலின்ஸ் வகை நீர்மூழ்கிகளே கூட பரமாரிக்க பெரும் செலவு பிடிக்கிறது. இந்தச் சூழ்நிலையில் 8 நவீன அணுசக்தி நீர்மூழ்கிகளை பரமாரிப்பது என்பதும் கணிசமான செலவு பிடிக்கும் செயலாகவே இருக்கும்.ஆடுகளை மேய்ப்பதுபோல யானைகளை மேய்க்க முடியாது. ஆற்றில் போட்டாலும் அளந்து போட வேண்டும் என்பார்கள் . ஆனால் நாம் கடலிலேயே கொண்டு போடுகிறோமே என்ற அச்சம் வருகிறது. ■





LEGAL STUDIES TUITION

YEAR 11 AND YEAR 12

BY VICTORIAN SOLICITOR

FOR FURTHER DETAILS

PLEASE CONTACT:
0405982583
or
Email: nag418662@gmail.com






# விழித்துக்கொள்ளுமா இளைய சமுதாயம்?

சியாமளா யோகேஸ்வரன்

'பாதிக்கப்பட்டவர்கள் தான் சமுதாயத்தை மேலும் பாதிப்படைய வைக்கின்றார்கள்' என்ற கூற்றில் மறுக்க முடியாத உண்மை ஒன்றுள்ளது. மவுன்ற் ஐசா, கெயின்ஸ், ரவுன்ஸ்வில் போன்ற வடக்கு குயின்ஸ்லாந்து நகரங்களில் இளைஞர்களால் இழைக்கப்படும் குற்றங்கள் அதிகரித்த வண்ணம் உள்ளன. இந்த நகரங்கள் உல்லாசப்பிரயாணிகளின் சுற்றுலா மையங்கள் என்பதால் மட்டும் சிறப்புப் பெறவில்லை. இந்த நாட்டின் உரிமையாளர்களான பூர்வீகக்குடியினர் அதிகளவில் வாழ்ந்து கொண்டிருக்கும் இடங்களும் இவைதான் என்பதும் குறிப்பிடத்தக்கது. அந்தச் சிறப்பை மழுங்கடிக்கும் வகையில் பூர்வீகக்குடியினருக்கான இளவயதினர் நடந்து வருவதும் வருத்தத்துக்குரியதே.

ஒரு இனம் எப்படியெல்லாம் திட்டமிட்டு அழிக்கப்பட்டது என்பதைக் கண்கூடாகக் கண்டவர்கள் நாங்கள். அதே போல் இந்த நாட்டின் பூர்வீகக்குடியினரும் திட்டமிட்ட இன ஒழிப்புக்குள்ளாக்கப்பட்டவர்கள் என்பது தான் வரலாறு. சிகரெட்டும் மதுவும் சமூகக்கட்டமைப்பைச் சிதைக்கும் வகையில் திட்டமிடப்பட்டே பூர்வீகக்குடி மக்களிடையே புகுத்தப்பட்டிருந்தன. இன்று அந்த சமூகத்தினரிடையே நிகழ்கின்ற குடும்ப வன்முறைகளுக்கும் பண ரீதியான பொருளாதார நெருக்கடி நிலைமைக்கும் இந்தத் தீய பழக்கங்களே வழி செய்தன என்பது மறுக்கப்பட முடியாத உண்மையாகும். பூர்வீகக்குடியினரின் சந்ததியினரை இல்லாமல் ஒழித்து விட வேண்டும் என்பதே நாட்டை ஆக்கிரமித்தவர்களின் அப்போதைய தலையாய எண்ணமாக இருந்தது.

வடக்கு குயின்ஸ்லாந்துப் பகுதியில் பொலிசாரினால் குறிவைத்துக் கண்காணிக்கப்படும் இளைஞர்களில் 95% ஆனவர்கள் பூர்வீகக்குடியின இளைஞர்கள் என்று தரவு கூறுகின்றது. இதில் பெரும்பகுதியினர் மீளக்குற்றம் இழைப்பவர்களாகவே காவல்துறையினரால் கணிக்கப்படுகின்றனர். இளம் சமுதாயத்தினரைக் குறி வைத்து அவர்களின் செயல்களைக் கண்காணித்து வருவது சமத்துவமற்ற அநீதியான செயல் என்று நாட்டின் மூத்த குடிகளின் உள்ளூர்த் தலைவர்கள் வருத்தம் தெரிவித்திருக்கிறார்கள். அவை சிறுவர்களின் அடிப்படை உரிமைகளை மீறும் அத்துமீறலான செயலாகவே மனித உரிமைக்கான ஆர்வலர்களாலும் நோக்கப்படுகின்றது.

இளையோரின் வன்முறைகளாலும், சட்டத்தை மீறும் வகையிலான செயல்களினாலும் சுற்றுலாப்பயணிகளின் வருகை பாதிக்கப்பட்டு, நாட்டின் பொருளாதாரம் வீழ்ந்துவிடக்கூடாது என்பதற்காக நடவடிக்கை எடுத்தேயாக வேண்டிய கட்டாயத்தில் அரசாங்கம் இருக்கின்றது. நாடாளுமன்றத்தினால் இளைஞர்களின் நீதி தொடர்பாக கடுமையான புதிய விதிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் அவை குற்றங்களின் எண்ணிக்கையைக் குறைப்பதைக் காட்டிலும் குற்றமிழைப்பதற்கான மனப்பாங்கை உருவாக்கி விடுவதற்கான வாய்ப்பே அதிகம் இருப்பதாக மூத்த குடிகள் வேதனை தெரிவித்துள்ளனர்.

பாரதூரமான மீளக்குற்றமிழைப்பவர்களின் பட்டியலில் உள்ளவர்களின் நடவடிக்கைகள் (Serious Repeat offender Index- SROI) காவற்துறையினரால் மிக நுணுக்கமாகக் கண்காணிக்கப்படுகின்றன. இவ்வாறு கண்காணிக்கப்படும் 401 பேரில் 70% ஆனவர்கள் பழங்குடியினத்தவர்கள். இவர்களில் 44.6% ஆன இளைஞர்கள் தண்டனைக்குள்ளாகின்றார்கள் இந்தப் புள்ளிவிபரத்தைப் பார்க்கையில் பூர்வீகக்குடியினத்தவர்கள் மொத்தச் சனத்தொகையில் **4.6** வீதம் மட்டுமே என்பது வேதனைக்குரிய உண்மையாகும்.

அண்மையில் எம்மா என்ற பெண்ணின் படுகொலையின் போது பூர்வீகக்குடியின இளைஞர்கள் குறி வைத்துக் கைது செய்யப்பட்டிருந்தார்கள். அது பற்றிய புள்ளி விபரத்தை காவல்துறையினரிடம் ஊடகவியலாளர்கள் கேட்டபோது, காணாமல் போனவர்கள் பற்றிய குறிப்பைக் கொடுக்கும் போது மட்டுமே எந்த இனத்தவர் என்று குறிப்பிடுவோம் என்று ஒரு மூடி மறைப்பான பதிலைக் கொடுத்திருந்தார்கள்.

எந்நேரமும் மதுவும் கேளிக்கைகளுமாய் இருக்கும் வீட்டுச் சூழ்நிலை பிடிக்காத சிறுவர்கள் வீட்டிலிருந்து வெளியேறி விடுகிறார்கள். அதுமட்டுமல்லாமல் வீடுகளில் எதிர் நோக்கும் உடல் ரீதியிலான மற்றும் பாலியல் ரீதியான துன்புறுத்தலைத் தவிர்ப்பதற்கும் வீட்டு வன்முறைகளிலிருந்து தப்பிப்பதற்குமாக இரவுப் பொழுதை தெருக்களில் கழிக்கும் பூர்வீகக்குடியின சிறுவர்கள் வடக்கு குயின்ஸ்லாந்து மாநகரங்களில் அதிகரித்த வண்ணம் உள்ளார்கள். இரவு முழுவதும் குடும்பத்தினரால் தேடப்படாத நிலையில் தெருவில் நிற்கும் இந்தச் சிறுவர்களால் மறுநாள் பாடசாலைக்குச் செல்ல முடியுமா என்பது ஒரு கேள்விக்குறியே. படிப்பையும், பழக்கவழக்கத்தையும் சொல்லித் தருகின்ற பாடசாலைக்கு இந்தச்சிறுவர்களால் செல்ல முடியவில்லை. ஒப்பற்ற பாரம்பரியத்தைக் கொண்ட ஒரு இனத்தின் வாழ்க்கையும், வரலாறும் இவ்வாறு வீதியிலேயே முடிந்து போய் விடப்போகின்றதா என்பதுதான் மூத்தோரின் ஆதங்கம்.

பதினான்கு வயதுடைய பழங்குடியின மாணவன் ஒருவன் இரவுப்பொழுதொன்றில் டவுன்ஸ்வில் சந்தைத் தொகுதிக்கு முன்பாக நின்று கொண்டிருந்தபோது காவல்துறையினரால் விசாரணைக்குள்ளாக்கப்பட்டு புகைப்படமும் எடுக்கப்பட்டதாக ஒருவிதமான அச்சத்துடன் தெரிவித்திருந்தான். இப்படி ஒரு சம்பவம் வெள்ளையின மாணவன் ஒருவனுக்கு நடந்திருந்தால், ஊடகங்களும் சமூக ஆர்வலர்களும் எங்ஙனம் கொதித்து எழுந்திருப்பார்கள்? ஆனால் அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை என்ற போது இனரீதியிலான பாகுபடுத்தலுடன் நீதிக்கான கண்ணோட்டம் நின்று விடுகின்றது என்பது தெளிவாகின்றது. சர்வதேச ரீதியிலான அனைவருக்கும் பொதுவான நீதி என்பது இந்த நாட்டில் கூட புறக்கணிக்கப்படுகின்றது என்பது அதிர்ச்சியான உண்மையாகும், தமக்கொரு நீதி, நாட்டின் மறுபக்கங்களுக்கு ஒரு நீதி என்ற வகையில் இனரீதியிலான பாரபட்சம் நிலவுவதாக மூத்தோர் குமுறுகின்றனர். இது போன்ற நடவடிக்கைகளால் வாழ்க்கை முழுவதுக்கும் தொடரக்கூடியதான உளரீதியிலான பாதிப்பை இளைஞர்களிடம் காவல்துறையினர் ஏற்படுத்துகின்றனர் என்ற மூத்தோரின் குற்றச்சாட்டில் உண்மை இல்லாமலில்லை.

குயின்ஸ்லாந்து காவல்துறைக்கான சேவையகம், முன்கூட்டியே இளைஞர்களைக் கண்காணித்து தேவையான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் அவர்களைச் சிறையில் அடைக்காமல் தடுப்பதையும், மீளக்குற்றமிழைப்பதைத் தடுப்பதையும் உறுதிப்படுத்த எண்ணுவதாகக் கூறி தன்னை நியாயப்படுத்துகின்றது. அந்தக் கூற்றில் முற்று முழுதாக உண்மை இல்லாமல் போய் விடவில்லை. திருடுவதில் கூட இந்த இளைஞர்கள் சில சமயங்களில் அதீத எல்லைக்குச் சென்று விடுகின்றார்கள் என்பதும் கண்கூடான உண்மையே.

கார் விற்கும் இடங்களில் பூட்டை உடைத்து புதிய கார்களைத் திருடுவதும், கடைகளை உடைத்து விலையுயர்ந்த பொருட்களைக் கொள்ளை அடிப்பதுமான நிகழ்வுகள் அதிகரித்து வருகின்றன. புதிய கார் ஒன்றை வரவழைப்பதற்கு குறைந்த பட்சம் ஆறு மாதங்களாவது எடுத்துக் கொள்ளும் நிலையில் இப்படியான திருட்டுக்கள் மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியையும் அசௌகரியத்தையும் ஏற்படுத்தியுள்ளன. ஒரு தடவை திருட்டில் இறங்கிய பின்னர் தண்டனை பற்றிய அச்சம் அகன்று போய் விட திருட்டுத் தொழில் தொடர்கதையாகி விடுகின்றது. மக்களைப் பாதுகாக்கும் பெரும்பொறுப்பு காவல்துறையினரின் கைகளில் தான் உள்ளது. சித்திரைப்பாடசாலை விடுமுறையின் போது சுற்றுலாப்பயணிகளின் வருகையை ஊக்குவிக்கும் முகமாக காவல்துறையினரின் ரோந்து அதிகரிக்கப் படவுள்ளது. அதிகரித்து வரும் குற்றச்செயல்கள், காவல் துறையினருக்கு தேவையில்லாத அழுத்தத்தையும் கொடுக்கவே செய்கின்றது.

சட்டத்தினதும் அரசாங்கத்தினதும் நடவடிக்கைகள் வெற்றி அளிக்காமல் போய்விட, பழங்குடியினரின் மூத்தோர் தம் இளையோரைப் பாதுகாக்க வேறுவிதமான நடவடிக்கைகளை எடுக்கின்றனர். தொழில்நுட்பத்தில் இருந்தும் தொல்லை கொடுக்கும் குடும்பத்தில் இருந்தும்- குற்றம் செய்யத் தூண்டும் இடத்தில் இருந்தும் - தொலைவாக, இயற்கை சூழ்ந்த ஒரு இடத்தில் முகாமிடப்பட்டு இளைஞர்களைத் தங்க வைக்கும் வகையிலான நிகழ்ச்சிகளை அவர்கள் ஒழுங்கு செய்திருக்கின்றார்கள். ஆற்றங்கரையும், மேலே தெரியும் நெடுவானமும் அவர்களுக்கு இயற்கையை மட்டும் ரசிக்கக் கற்றுக் கொடுக்கவில்லை, அழிந்து போகும் பாரம்பரிய வேர்களுடன் தமது இயற்கையுடன் ஒன்றி வாழ்ந்த பழக்கவழக்கங்களையும் சேர்த்தே மூத்தோரிடமிருந்து கற்றுக் கொள்கின்றார்கள்.

சிறுவர்கள் மீது சட்டத்தைக் கண்மூடித்தனமாகப் பாயவிடாமல், வீதியில் நிற்கும் சிறுவர்களுடன் மனம் விட்டுப் பேசி, அவர்களின் பிரச்சினையைப் புரிந்து கொள்ள முயல்வதாகவும், பிரச்சினைக்கான தீர்வைக் கண்டறிய முயல்வதாகவும் ரொண்டா என்ற பூர்வகுடியினப்பெண்மணி சொல்கின்றார். வீட்டுக்குச் செல்லப் பிடிக்காமல் பட்டினியாக இருக்கும் சிறுவர்களுக்கு, சொக்லேட், சாண்ட்விச் போன்ற உணவுகளை உண்ணக் கொடுத்து இரவு முழுவதும் அவர்களுக்கு ஆறுதலாக இருக்கின்றார் இந்தப் பெண்மணி. அன்பு கிடைக்காதவிடத்தும் தவறிழைக்கத் தூண்டும் சந்தர்ப்பம் அமையுமிடத்தும் தான் ஒருவன் கெட்டவனாகின்றான். தன்னை அறிந்தவன் தவறிழைக்கத் துணிவதில்லை. பழம்பெரும் சரித்திரத்தைத் தன்னுள் அடக்கியிருக்கும் தம் இனத்துக்கு நேர்ந்த, நேர்ந்து கொண்டிருக்கின்ற தீங்கை இளைய சமுதாயம் உணர்ந்து கொள்ளுமாயின் அவர்களின் வெற்றியை யாராலும் தடுத்து நிறுத்தி விட முடியாது. ஒரு இனத்தின் வாழ்வும் எதிர்காலமும் வருங்காலச் சந்ததியினரான தம் கைகளில் தான் உள்ளது என்று இந்த இளைய சமுதாயம் என்றாவது புரிந்து கொள்ளத் தலைப்படுமா?

# சின்னங்களுக்கு மயங்கும் இயந்திரங்கள் அல்லர் தமிழ் மக்கள்!

## சிவசக்தி ஆனந்தன் (நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்)



**1980 களின் முற்பகுதியிலிருந்து ஈழவிடுதலைப் போராட்டத்தில் இணைந்து செயற்பட்ட சிவசக்தி ஆனந்தன், ஆயுதப்போராட்டத்திலும் அதன் பின்னரான ஜனநாயக நீரோட்டத்திலும் இணைந்து பயணிப்பவர். ஒரு காலத்தில் வன்னிப் பிராந்தியத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்தின் முக்கியமான செயற்பாட்டாளராக இயங்கிய ஆனந்தன், மக்களுடன் மிக நெருக்கமான உறவையும் அரசியற் செயற்பாடுகளையும் கொண்டவர். இதன்காரணமாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதியாக (நாடாளுமன்ற உறுப்பினராக) செயற்பட்டவர். முக்கியமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக வன்னித் தேர்தல் பிராந்தியத்தைப் பிரதிநிதித்துவம் செய்தவர். எந்தச் சந்தர்ப்பத்திலும் தனிப்பட்ட ரீதியில் எத்தகைய விமர்சனங்களையும் சந்திக்காத அரசியல்வாதிகளில் ஒருவர். மக்களுக்கான அவசியப் பணிகளை பாரபட்சமின்றி மேற்கொண்டதை இன்றும் துணிந்து சொல்லக் கூடியவர்களில் ஒருவராக இருக்கும் சிவசக்தி ஆனந்தனுடன் எதிரொலிக்காக மேற்கொண்ட நேர்காணல் இது.**

**நேர்கண்டவர்: கருணாகரன்**

**கேள்வி: தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இப்பொழுது புதியதொரு அணியாக உள்ளது. அதற்கான சின்னமும் (குத்துவிளக்கு) புதியது. சின்னமும் அணியில் உள்ளவர் களும் மட்டும் புதிதா? அல்லது அதன் உள்ளடக்கப் பண்புகளும் சிந்தனையும் வழிமுறைகளும் புதிதாக இருக்குமா?**

**பதில் :** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது வழித்தடத்தை சரியாக நிர்மாணித்துள்ளது. 2009 க்குப் பின்னர், தமிழர்களின் இருப்பைத் தீர்மானிக்கும் சக்தியாக, தமிழர்களின் வாழ்வுரிமையைத் தீர்மானிக்கும் சக்தியாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே செயலாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. பல்வேறு காரணங்களுக்காக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சின்னமான 'வீட்டுச்' சின்னத்தை அன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சின்னமாக ஏற்றுக்கொண்டோம்.

சின்னத்துக்காக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெயரில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தேர்தல்களை எதிர்கொண்டது.

இருப்பினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு கட்டமைப்பாக, தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை வென்றெடுக்கக்கூடிய அரசியல் ஸ்தாபனமாக உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ந்தும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினாலும், தமிழீழ விடுதலை இயக்கத்தினாலும் முன்வைக்கப்பட்டிருந்தது. ஆனால் இலங்கைத் தமிழரசுக் கட்சி அந்தக் கோரிக்கைக்கு மதிப்பளிக்காமல் கூட்டமைப்பின் நிழலில் தனது கட்சியை வளர்த்துக்கொள்வதிலேயே முனைப்புடன் செயற்பட்டுவந்தது. தமிழரசுக் கட்சியின் இந்த மேலாதிக்க மனப்பான்மைக்குக் கடிவாளம் போடும் நோக்கத்திலேயே தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தையும் (புளொட்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இணைய வைத்து தமிழ் மக்களுக்கான அரசியல் ஸ்தாபனத்தை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்று ஈபிஆர்எல்எவ்வும் ரெலோவும் தீர்மானித்து அவர்களுடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளை நடத்தி, புளொட்டையும் கூட்டமைப்புக்குள் இணைத்தோம்.

ஐக்கியத்தைக் குலைத்துவிடக்கூடாது என்பதற்காகவே தமிழரசுக் கட்சியின் மேலாதிக்கத்தை உள்ளிருந்தபடியே எதிர்த்தும் வந்தோம். 2017 இல் இலங்கை அரசாங்கத்தை சர்வதேச ரீதியில் நெருக்கடிக்கு உள்ளாக்கி, தமிழர்களின் உரிமைகளை ஓரளவுக்கேனும் வென்றெடுக்கக்கூடிய சந்தர்ப்பத்தை கூட்டமைப்பின் தலைமை என்று தனக்குத் தானே பட்டம் சூட்டிக்கொண்ட இலங்கைத் தமிழரசுக் கட்சி தவறவிட்ட நிலையில், தனது நிலைப்பாட்டை கூட்டமைப்பின் நிலைப்பாடாக மாற்ற முற்பட்டதை சகிக்க முடியாமல் இனியும் தமிழரசுக் கட்சியுடன் பயணிப்பது பயனற்றது என்ற முடிவெடுத்தோம். தமிழீழ விடுதலை இயக்கமும், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமும் இன்று அந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. எனவே கூட்டமைப்பிலிருந்து வெளியேறியது இலங்கைத் தமிழரசுக் கட்சியே தவிர, ஏனையோர் அல்லர். வெறும் சின்னத்துக்காக ஒரு கட்சியின் மக்கள் விரோத மேலாதிக்கத்தை ஏற்க முடியாது என்ற நிலைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் இன்று வந்துள்ளோம். இலங்கைத் தமிழரசுக் கட்சி ஒருபோதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவத்தைக் கொண்டிருக்கவில்லை என்பதும் இலங்கைத் தமிழரசுக் கட்சியினரின் நிலைப்பாடு தவறு என்பதையும் நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனக்கான சின்னத்தை மாற்றிக்கொண்டுள்ளது. அத்துடன் தமிழரசுக் கட்சியின் மேட்டுக்குடி அரசியலிலிருந்து விலகி, மக்களுக்கான அரசியலை முன்னெடுப்பதற்கு இன்றைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயன்று வருகிறது. அரசியல் அவதானிகள், புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், தொழிற்சங்கத்தினர் ஆகியோர் அடங்கிய சிந்தனைக்களத்தினை உருவாக்கி, அதன் மூலமாக கொள்கைகளையும் செயற்றிட்டங்களையும் வகுத்துச் செயற்பட வேண்டும் என்ற எமது நீண்டநாள் விருப்பம் நிறைவேறுவதற்கான வாய்ப்புக் கிட்டியுள்ளது.

இதனை மேற்குறிப்பிட்ட தரப்புகள் பரிசீலித்து உரிய முறையில் செயற்படுவதன் மூலம் தமிழ்த் தேசிய அரசியலை அர்த்தமுள்ளதாக மாற்றமுடியும் என்று நம்புகிறோம். சரியான முடிவெடுத்துச் செயற்படுபவர்களை முன்னோக்கிச் செலுத்த வேண்டிய கடப்பாடு மேற்குறிப்பிட்ட தரப்பினருக்கும் இருக்கிறது.

**கேள்வி: அப்படியென்றால் ஏற்கனவே இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இப்பொழுதுள்ள கூட்டமைப்புக்கும் இடையிலான வேறுபாடுகள் என்ன?**

**பதில் :** அன்றைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கத்துவக் கட்சிகளுக்கு மதிப்பளிக்காமல் மக்கள் விரோதச் செயற்பாட்டை முன்னிறுத்தி ,தன்னிச்சையாக முடிவெடுத்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முடிவுகளுக்குக் கட்டுப்பட்டிருந்தது. ஐக்கியத்தைப் பேணவேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக அதிலிருந்து வெளியேறவோ அல்லது தமிழரசுக் கட்சியை வெளியேற்றவோ ஏனையவர்கள் விருப்பம் இன்றியிருந்தனர். மேற்சொன்ன அரசியல் அவதானிகள், புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், தொழிற்சங்கத்தினர் தமிழரசுக் கட்சியின் மேலாதிக்கத்தைக் கண்டித்து அவர்களை வழிப்படுத்தியிருந்தால் அல்லது ஏனைய தரப்பினரை அவர்களை நிராகரிக்கும்படி நிர்ப்பந்தித்திருந்தால் இன்றைய கூட்டமைப்பு எப்பொழுதோ சாத்தியமாகியிருக்கும். இன்றைய உடைவும் நிகழ்ந்திருக்காது.

இன்றைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனநாயக விழுமியங்களை மதித்து, மாற்றுக்கருத்துகளுக்கு மதிப்பளித்து, அரசியல் களயதார்த்தத்தைப் புரிந்து, புவிசார் அரசியல் நிலைமைகளை அவதானித்து, மேற்சொன்ன சிந்தனைக்களத்தினருடன் உரையாடி முடிவுகளை மேற்கொண்டு செயற்பட முயற்சிக்கும்.

**கேள்வி: இதையெல்லாம் எப்படிச் சாத்தியமாக்குவது? அதற்கான அடிப்படைகள் என்ன? கட்டமைப்புகள் ஏதுமுண்டா?**

> இலங்கை அரசாங்கத்தின் தமிழ் மக்கள் விரோதச் செயற்பாடுகளைக் கண்டிக்கின்ற, பதவிகளுக்கு விலை போகாது நியாயத்தின் பக்கம் நிற்கின்ற, தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்ற சகல தரப்பினரையும் ஓரணியில் கொண்டுவரவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. அதற்கான வாய்ப்புகள் குறித்து தொடர்ந்தும் ஆராய்ந்துவருகின்றோம். சிந்தனைக் களத்தில் இருப்பவர்களின் ஆலோசனைகளையும் கருத்துகளையும் எதிர்பார்க்கின்றோம்.

**பதில் :** ஒடுக்கப்பட்ட தேசிய இனமக்களுக்கான தலைமை எப்படியிருக்க வேண்டும் என்பதை எமக்கு சர்வதேச அரசியல் களம் நன்கு கற்றுக்கொடுத்துள்ளது. இன்றைய சூழலில் தமிழ் மக்களுக்கான உரிமைகளை வென்றெடுப்பதற்கு தமிழ்த் தேசியப் பரப்பில் அரசியல் களமாடும் அனைவரும் ஒரு பொதுக்கொள்கையின்கீழ், பொதுவேலைத்திட்டத்தினை வகுத்து தமிழர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படுகின்ற, எமது இருப்பைக் கேள்விக்குள்ளாக்குகின்ற, எமது கலாசார பண்பாட்டு, வாழிடங்களை அபகரிக்கின்ற நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்கும் , எமக்குரித்துடைய சுயநிர்ணய உரிமைகளை வென்றெடுப்பதற்கும், பற்றுறுதியுடன் செயற்படுவதற்குத் தயாராக உள்ள அனைத்து சக்திகளையும் ஒருங்கிணைக்க வேண்டும், ஆபிரிக்க தேசிய காங்கிரஸ், இந்திய விடுதலைப்போரின் போது கட்டமைக்கப்பட்ட இந்திய தேசியக் காங்கிரஸ், பலஸ்தீன விடுதலையை முன்னெடுத்துச் செல்லும் பலஸ்தீன விடுதலை இயக்கம் போன்ற அமைப்புகளின் கட்டமைப்புகளையும், செயற்றிட்டங்களையும் பொதுக்கொள்கையையும் பாடமாகக் கொண்டு செயற்படவேண்டும். இன்றைய கூட்டமைப்பு அதனை நோக்கிச் செல்ல வேண்டும்செல்லும். அதற்கு அனைத்து மக்களினதும் பங்களிப்பும் ஊக்கமும் அவசியம்.

**கேள்வி: நீண்டகாலமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பதை வீட்டுச் சின்னத்துடன் அறிமுகப்படுத்திவிட்டு இப்பொழுது அதை நிராகரிக்குமாறும் புதிய சின்னமான குத்துவிளக்கை ஏற்குமாறும் மக்களிடம் கோரும்போது அதன் சாத்தியப்பாடுகள் எப்படியாக அமையும் என எதிர்பார்க்கிறீர்கள்?**

**பதில் :** தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குச் சின்னத்தை மட்டும் வழங்கிவிட்டு இலங்கைத் தமிழரசுக் கட்சி மேற்கொண்ட மக்கள் விரோத நிலைப்பாடுகளால் எமது மக்கள் அந்தக் கட்சியின்மீது அதிருப்தியடைந்திருக்கிறார்கள். நாம் அன்று முன்வைத்த விமர்சனங்கள் இன்றுதான் மக்களைச் சென்றடைந்துள்ளன. எனவே மக்களை யாரும் 'வீட்டுச்' சின்னத்தை நிராகரிக்கும்படி கோரவேண்டியதில்லை. அவர்கள் ஏற்கனவே அந்த முடிவுக்கு வந்துவிட்டார்கள். இன்னும் சொல்லப்போனால், தமிழரசுக் கட்சியில் உள்ள இளைஞர்கள் மற்றும் உண்மையான தமிழ்த் தேசிய உணர்வுள்ளவர்கள் கூட அந்தக் கட்சியின்மீது அதிருப்தியிலுள்ளனர். எமது மக்கள் சின்னத்தின் மீது மட்டும் மையல்கொண்டு வாக்களிக்கும் இயந்திரங்கள் அல்லர். அவர்கள் அறிவாளிகள். உண்மையான ஐக்கியத்தை இனங்கண்டு, தமக்கான அரசியல் தலைமை குத்துவிளக்கு சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர்தான் என்பதில் உறுதியாக உள்ளனர். உதிரியாக உள்ள மக்களை தமிழ்த் தேசிய அரசியல் நிலையின்பால் உந்தித்தள்ள வேண்டியது சிந்தனைக்களத்தில் செயலாற்றுபவர்களே.

> ஐக்கியத்தைக் குலைத்துவிடக்கூடாது என்பதற்காகவே தமிழரசுக் கட்சியின் மேலாதிக்கத்தை உள்ளிருந்தபடியே எதிர்த்தும் வந்தோம். 2017 இல் இலங்கை அரசாங்கத்தை சர்வதேச ரீதியில் நெருக்கடிக்கு உள்ளாக்கி, தமிழர்களின் உரிமைகளை ஓரளவுக்கேனும் வென்றெடுக்கக்கூடிய சந்தர்ப்பத்தை கூட்டமைப்பின் தலைமை என்று தனக்குத் தானே பட்டம் சூட்டிக்கொண்ட இலங்கைத் தமிழரசுக் கட்சி தவறவிட்ட நிலையில், தனது நிலைப்பாட்டை கூட்டமைப்பின் நிலைப்பாடாக மாற்ற முற்பட்டதை சகிக்க முடியாமல் இனியும் தமிழரசுக் கட்சியுடன் பயணிப்பது பயனற்றது என்ற முடிவெடுத்தோம்.

**கேள்வி: அடுத்துவரும் தேர்தலில் (அது எந்தத் தேர்தலாக இருந்தாலும்) புதிய அணியினர் மேலும் புதிய தரப்புகளை இணைத்துப் பெரியதொரு கூட்டமைப்பை உருவாக்கும் வாய்ப்புள்ளதா?**

**பதில் :** இலங்கை அரசாங்கத்தின் தமிழ் மக்கள் விரோதச் செயற்பாடுகளைக் கண்டிக்கின்ற, பதவிகளுக்கு விலைபோகாது நியாயத்தின் பக்கம் நிற்கின்ற, தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்ற சகல தரப்பினரையும் ஓரணியில் கொண்டுவரவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. அதற்கான வாய்ப்புகள் குறித்து தொடர்ந்தும் ஆராய்ந்துவருகின்றோம். சிந்தனைக் களத்தில் இருப்பவர்களின் ஆலோசனைகளையும் கருத்துகளையும் எதிர்பார்க்கின்றோம்.

**கேள்வி: 1987 இல் கொண்டுவரப்பட்ட மாகாணசபை முறைமையையும் 13 ஆவது திருத்தத்தையும் முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற குரல்கள் அழுத்தமாக எழுந்துள்ளன. இது வரலாற்றில் பின்னோக்கிச் செல்வதாக அமையாதா?**

**பதில் :** பல்வேறு உயிர்த்தியாகங்கள், சொத்திழப்புகள் மத்தியில்தான் இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்டது என்பதையும், அதன் விளைவாகத்தான் அரசியல் யாப்பில் 13 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டு மாகாணசபை முறைமை அறிமுகமானது என்பதையும் நாம் நினைவில் கொள்வது அவசியம். அன்று முதல் இன்றுவரை மாகாணசபை தமிழ் மக்களின் எதிர்பார்ப்பை முழுமையாக நிறைவேற்றும் என்று யாரும் கூறவில்லை. ஆனால் அன்றைய காலகட்டத்தில் மேலும் அழிவுகளைத் தடுப்பதற்கும் வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் தம்மை ஆசுவாசப்படுத்திக்கொண்டு முன்செல்வதற்கும் அது படியாக அமையும் என்ற அடிப்படையிலுமே ஈ.பி.ஆர்.எல்.எவ். மாகாணசபை முறைமையை ஏற்றுக்கொண்டது.

தமிழீழம்தான் முடிந்த முடிவு என்ற அடிப்படையில் செயற்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட நிலையில், எமக்கு ஏற்பட்ட வலிகளையும் இழப்புகளையும் நினைவிற்கொண்டும் முன்னெப்பொழுதும் இல்லாத வகையில் எமது இருப்பும், எமது வரலாற்று வாழிடங்களும், வழிபாட்டுத் தலங்களும் பறிபோகும் நிலையில் இவற்றைத் தடுப்பதற்கு எமக்கு இருக்கின்ற ஒரே வழி இருநாடுகளுக்கு இடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கையின் அடிப்படையில் உருவான மாகாணசபை முறைமையைப் பற்றிப்பிடித்து சட்டரீதியாகவும் அரசியல் அமைப்பினூடாகவும் எமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை முழுமையாகக் கையகப்படுத்திக்கொள்வதே. இதன் மூலம் மட்டுமே எமது இருப்பை இல்லாமல் செய்யும் நடவடிக்கைகளையும், எமது வரலாற்றுபூர்வ வாழிடங்களையும் ,வழிபாட்டுத் தலங்களையும், கலாசார பண்பாட்டு விழுமியங்களையும் ஓரளவுக்கேனும் பாதுகாத்துக்கொள்ள முடியும். அத்துடன் ஜனநாயக ரீதியில்கூட போராடத் தயாராக இல்லாத மக்களுக்கு நம்பிக்கையை ஊட்டுவதாகவும் அமையும். ஆகவே இதனை வரலாற்றில் பின்னோக்கிய நகர்வா முன்னோக்கிய நகர்வா என்று ஆராயாமல், முன்னோக்கி நகர்வதும் பின்வாங்கலும் யுத்ததந்திரம் என்பதை ஏற்றுச் செயற்படுவதே இன்றைய காலத்தின் தேவை.

**கேள்வி: இதைத் தவிர நடைமுறையில் வெற்றி யளிக்கக்கூடிய மாதிரி தமிழ் மக்களுக்கு வேறு மாற்றுவழிகளும் தீர்வுத்திட்டங்களும் இல்லையா?**

**பதில் :** முதலில் இருப்பதை உறுதிப்படுத்திக்கொண்டு, மேற்கொண்டு எம்மினத்தை பலவீனமாக்காமல், எமக்கான நிரந்தர அரசியல்தீர்வை நோக்கி முன்செல்வதற்கு முயல வேண்டும். முதலில் மாகாணசபைகளுக்கான அதிகாரங்களை முழுமையாகப் பெற்றுக்கொண்டு, அடுத்த கட்டத்தை நோக்கி நகர்வதற்கு அனைவரும் சிந்திக்க வேண்டும்.

**கேள்வி: வடக்கு - கிழக்கு இணைப்பு, முழுமைப்படுத்தப்பட்ட மாகாணசபை முறைமை போன்றவற்றை நடைமுறை ரீதியாக வெற்றியடைய வைப்பதற்கு முஸ்லிம்களின் பங்களிப்பு அவசியமல்லவா? அதற்கு இன்றைய கூட்டமைப்பின் அரசியல் வழிமுறைகள் என்ன?**

**பதில் :** இதற்கு பொத்தாம் பொதுவாக பதிலளிப்பது கடினம். மிக நீண்ட உரையாடல்கள் இருதரப்பினர் மத்தியில் நிகழ வேண்டும். ஒருவர்மீது மற்றவர் நம்பிக்கை வைக்கும் அளவுக்கு திறந்த மனதுடன் உரையாடல்கள் இடம்பெறவேண்டும். மாகாணசபையின் முதல்வர் எத்தகைய தரப்பினராக இருக்க வேண்டும் என்பதற்குப் பதிலாக சிறந்த நிர்வாகத்திறன் படைத்தவராகவும் அனைத்து மக்களையும் சமமாக நடத்துபவராகவும் பல இழப்புகளுக்கு மத்தியில் உருவாகியுள்ள மாகாணசபையின் வளர்ச்சியை விரும்புபவராகவும் மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தையும் ஒற்றுமையையும் ஐக்கியத்தையும் விதைப்பவராகவும் இருக்க வேண்டும். இத்தகைய பண்புகளைக் கொண்டவரே முதலமைச்சராக வருவதற்குத் தகுதியானவர் என்ற புரிதலை மக்கள் மத்தியில் விதைக்க வேண்டும்.

**கேள்வி: ஈ.பி.ஆர்.எல்.எவ். (EPRLF) மிகப்பலமான ஒரு அரசியல் இயக்கமும் கட்சியுமாகும். இதனுடைய ஆளுமைகள் இன்று சிதறுண்டு தனித்தனியாக உள்ளனர். இவர்களை எல்லாம் ஏதோவொரு வகையில் ஒரு பொது உடன்பாட்டின்கீழ் இணைக்க முடியாதா?**

**பதில் :** இலங்கையில் இனப்பிரச்சினையை உருவாக்கி அதில் அரசியல் ரீதியில் குளிர்காய நினைத்த சிங்கள பௌத்த மேலாதிக்க சக்திகளுக்கு பதிலளிக்கும் முகமாகவே தேசிய இனவிடுதலையை முன்னிறுத்தி தமிழ்த் தேசிய இனம் ஜனநாயக வழியிலும் ஆயுதப் போராட்ட வழியிலும் போராடியது. ஈ.பி.ஆர்.எல்.எவ்வைப் பொறுத்தவரை தேசிய இனவிடுதலை என்பது வர்க்கப்போராட்டத்துடன் பின்னிப்பிணைந்தது என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தது. இதே சிந்தனையுடன் ஈரோசும் செயற்பட்டது. இலங்கையின் உழைக்கும் வர்க்கமான தொழிலாளர்களின் தலைமையின் கீழேயே ஈழவிடுதலைப் போராட்டமும் சாத்தியமாகும் என்ற நிலைப்பாட்டை மேற்சொன்ன இரண்டு கட்சிகளும் (இயக்கங்களும்) கொண்டிருந்தன.

இன்றும் இதே சிந்தனையுடன் செயற்படுகின்ற சக்திகள் இருக்கின்றன. இன்றைய அரசியல் சூழலைக் கருத்திற்கொண்டு, இவற்றை ஓரணியில் திரட்டி போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான ஏதுநிலைகள் குறித்து ஆராய்வது மிக முக்கியம். அதற்கான கொள்கையை வகுத்து, பொதுவான வேலைத்திட்டத்தின் கீழ் அனைவரையும் ஒருங்கிணைக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படவேண்டும். முடியுமா ,முடியாதா என்பதைவிட அதற்கான பணிகளை சகலரும் மேற்கொள்ள வேண்டும்.

1970 களின் தொடக்கத்தில் எப்படி புத்திஜீவிகள், தொழிற்சங்கத்தினர், சமூகச் செயற்பாட்டாளர்கள் அரசியல் விருப்புடன் எவ்வாறு பற்றுறுதியுடன் செயற்பட்டனரோ அவ்வாறு செயற்பட முன்வரவேண்டும். அவர்களது ஒத்துழைப்பு இல்லாமல் இந்த விடயம் சாத்தியமில்லை.



# வடக்கை ஆட்டிப்படைக்கும் கந்துவட்டி

தாயகத்திலிருந்து வேதியன்

### சம்பவம் 01

அண்மையில் முள்ளிவாய்க்கால் பகுதியில் உள்ள வீடொன்றுக்குச் செல்ல நேர்ந்தது. கடன் பிரச்சினைகளால் தற்கொலைக்கு முயற்சித்தவர்களின் உளநிலையை ஆற்றுப்படுத்தும் வேலைத்திட்டம் அது. அந்தக் குடும்பத்தினரைப் பொறுத்தவரைக்கும் நாம் புதியவர்கள். வீட்டின் படலையடியில் நின்று அழைத்ததும் வீட்டினுள் ஒரே அழுகைச் சத்தம். மீண்டும் மீண்டும் அழைக்க வீட்டிலிருந்த குழந்தைகளும் வயதான தாயாரும், இன்னொரு இளங்குடும்பப் பெண்ணுமாக பின் பக்கமாக ஓட்டமெடுத்தனர். கொதிக்கும் மணலில் அவர்கள் ஓடிக்கொண்டிருப்பதைப் பார்க்க வேதனையாகவும், பதற்றமாகவும் இருந்தது.

இந்தக் களேபரத்தில் அயல்வீட்டார் எட்டிப் பார்க்கத் தொடங்கிவிட்டனர். ஏன் இவர்கள் இப்படி ஓட்டமெடுக்கின்றனர் எனக் கேட்டதற்கு அவர்கள் சொன்ன பதிலோ ஆச்சரியமாகவும், வேதனையாகவும் இருந்தது.

போருக்கு முன்பு நல்ல வசதி வாய்ப்புக்களுடன் தான் இந்தக் குடும்பம் இருந்திருக்கிறது. போரின் இறுதி இடமாக முள்ளிவாய்க்கால் இருந்தபடியால் அவர்களுக்கு பெரிதாகப் பொருளாதாரக் கஷ்டங்களும் இருக்கவில்லை. போரின் முடிவு எல்லோரையும்போலவே அவர்களிடமிருந்தும் அனைத்தையும் பறித்துக்கொண்டது. மீள் குடியேற்றப்படும்போது அவர்களிடம் ஏதுமிருக்கவில்லை. புதிதாக எதையாவது தொடங்குவதற்குப் பணமிருக்கவில்லை. பழைய நம்பிக்கையோடு இவர்களுக்குப் பணம்கொடுத்து உதவ பலர் காத்திருந்தனர். ஆனால் அனைவருமே வட்டிக்குத் தான் பணம் தருவோம் என நின்றுவிட்டனர். இந்தக் குடும்பத்தினரும் வட்டிக்கு வாங்கி தொழிலைத் தொடங்க, இலங்கையைத் தாக்கிய பொருளாதாரப் பேரிடி அவர்களின் தொழிலையும் துவம்சம் செய்துவிட்டது. ஆனால் வட்டிக்குப் பணம் கொடுத்தவரோ வீட்டு வாசலில் நின்றார். கேட்டுப் பார்த்தார், தனியே வந்து மிரட்டிப் பார்த்தார் எதனைச் செய்தும் கொடுத்த பணத்தை மீளப் பெறமுடியவில்லை. எனவே வழமை போல இறுதி ஆயுதத்தைக் கையிலெடுத்தார். தன் அடியாட்களை அனுப்பி மிரட்டினார். அந்த மிரட்டலுக்குப் பயந்தே குடும்பப் பெண்மணி தற்கொலை செய்ய முயற்சித்து அயலவர்களால் காப்பாற்றப்பட்டிருந்தார்.

இந்தப் பிரச்சினைகள் அடங்க, வட்டிக்காரர் மீண்டும் மிரட்டலை ஆரம்பித்தார். நாம் அவர்களைச் சந்திக்கச் சென்ற நாளுக்குள் பணத்தை வட்டியோடு மீளச் செலுத்தாவிட்டால், அவர்கள் வீட்டிலிருக்கும் ஏதாவது ஒரு குழந்தையைப் பிடித்துச் சென்று அதனை விற்று வரும் பணத்தில் கடனையும், வட்டியையும் எடுத்துக்கொள்வோம் என மிரட்டிச் சென்றிருக்கின்றனர். நாம் அவர்களது படலையடியில் நிற்க, குழந்தையைப் பிடித்துச் செல்லவே வந்திருக்கிறோம் என நினைத்தே அந்தக் குடும்பத்தினர் பதறியடித்து ஓட்டம் பிடித்திருக்கின்றனர்.

### சம்பவம் 02

சமூக வலைத்தளங்களில் அந்தக் காணொலிகள் பரபரப்பை ஏற்படுத்தின. கொரோனா காலத்துக்குப் பிறகு அந்தக் காணொலி எடுக்கப்பட்டிருக்கிறது. வட்டிக்கு கடன் வாங்கிய ஒருவர் உரிய தவணையில் அதனை மீளச் செலுத்தவில்லை எனத் தெரிவித்து, அவரை ஒரு வாழைத்தோட்டத்தினுள் அரை நிர்வாணப்படுத்தி பொல்லுகளால் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கும் காட்சிகள் அடங்கிய காணொலிதான் அது. மனித குலத்தையே வெட்கித் தலைகுனிய வைக்கும் இந்தச் செயல் பலத்த கண்டனத்தைப் பெற்றதையடுத்து பொலிஸார் இவர்களைத் தேடத் தொடங்கினர். அந்தத் தேடுதலின் பின்னர் தாக்குதல் சம்பவத்தோடு தொடர்புடைய சிலர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில் பின்வரும் தகவல் கிடைத்தது.

“யாழ்ப்பாணத்தில் பிரபலமான வட்டி வழங்குநர்கள் உள்ளனர். அவர்களின் பெயர் விபரங்கள் எங்கேயும் வெளிப்படுத்தப்படமாட்டாது இரகசியம் காக்கப்படும். காணி, வீடு உறுதிகள், நகை, வாகனம் என எதையாவது பிணையாக வைத்து உடனடியாகவே எத்தனை பில்லியனானாலும் வட்டிக்கு பெற்றுக்கொள்ளலாம். நிமிட வட்டியிலிருந்து, மாத வட்டி வரைக்கும் இவர்களிடம் வட்டி முறைமைகள் உண்டு. அவ்வாறு வட்டியை வழங்கத் தவறுபவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும். இதுவே பொதுவான நடைமுறை. இந்த நடைமுறைகளை மீறிச் செயற்படுபவர்கள் மீது வட்டிக்காரர்கள் எடுக்கும் நடவடிக்கைகள் கடுமையானதாக இருக்கும்.

அதற்காக யாழ்ப்பாணத்தில் வட்டி வழங்குபவர்களின் ஒருவர் நீர்வேலியில் வாழைத்தோட்டமொன்றை வைத்திருந்திருக்கிறார். ஆள் நடமாட்டமற்ற அந்த வாழைத்தோட்டத்துக்கு வட்டிக்குப் பணம் பெற்றவரை லாவகமாகப் பேசி ஏற்றிவருவதற்கு முச்சக்கரவண்டி ஒன்றும் பாவனையில் இருந்துள்ளது. அந்த முச்சக்கர வண்டி பொதுமக்களுக்கான வாடகை வண்டி எனினும் பகுதிநேரமாக தண்டிப்பதற்கான ஆட்கடத்தல் வேலையையும் அந்த முச்சக்கரவண்டியின் சாரதி செய்துவந்திருக்கிறார். முச்சக்கர வண்டியில் கடன் பெற்றவரை ஏற்றிச்சென்று வாழைத்தோட்டத்தில் இறக்கியதும், அங்கு ஏற்கனவே தங்கியிருக்கும் அடியாட்கள் அவரைத் தாக்கத் தொடங்குவர். எவ்வித மனிதநேயமும் பாராது காட்டுமிராண்டித்தனமாகத் தாக்குவர்.” அவ்வாறு தாக்குபவர்களுக்குப் பின்னர் என்ன நடக்கும் என்பது குறித்து பொலிஸார் எந்தச் செய்தியையும் வெளியிடவில்லை. இவ்வாறானதொரு நிதிசார் குற்றச்செயலுக்கு காரணமானவர்களைக் கைதுசெய்யவுமில்லை.

### சம்பவம் 03

தற்போது வவுனியாவில் பரபரப்பை ஏற்படுத்தியிருப்பது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த முழுப்பேரும் (கணவன், மனைவி, இரு பெண் குழந்தைகள்) தற்கொலை செய்துகொண்டனர் என்பதுதான். நன்கு படித்த குடும்பத்தினரான இவர்கள் தற்கொலை செய்துகொள்வதற்கான எவ்வித சாட்சியங்களையும் பொலிஸாரோ, சட்ட வைத்திய அதிகாரியோ வெளிப்படுத்தவில்லை. கண்டுபிடிக்கவுமில்லை. ஆனால் தற்கொலை என்கிற மாதிரியான பிம்பம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

தற்கொலை செய்துகொண்டவர்களாகக் காட்டப்படும் அந்தக் குடும்பத்தின் தலைமகன் நன்கு கற்றவர். வெளிநாட்டு வேலைவாய்ப்பு விடயங்களில் நீண்ட காலமாக ஈடுபட்டு வருபவர். அதேபோல அவரின் மனைவியும் வவுனியாவின் பிரபல பாடசாலையில் ஆசிரியையாகக் கடமையாற்றுபவர். மாதாந்தம் நிலையான வருமானமொன்றைப் பெறுபவர்கள். இரண்டு பிள்ளைகளும் எவ்விதக் குறைகளும் இன்றி வவுனியாவின் பிரபல பெண்கள் பாடசாலையில் கல்வி கற்றும் வந்தனர். அவர்களுக்கு வறுமை என்றால் என்ன நிறம் என்று கூடத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அவர்களின் தந்தையும் குடும்பத்தில் மிகவும் அன்பானவர் என்பதை அவர்களது பேஸ்புக்கை அவதானிப்பவர்களுக்குத் தெரிந்திருக்கும். குடும்பமாகத் தற்கொலை செய்துகொள்வதற்கு அவர்களிடத்தில் எவ்வித காரணிகளும் இல்லை. ஊடகங்களும், “சமூகமும் குடும்பத்தலைவர் அதிக கடன்களைப் பெற்றிருந்தார். அயலவர்களின் நகைகளை வாங்கியிருந்தார். அந்தக் கடனை மீளச் செலுத்த முடியாத பொருளாதார கஷ்டத்தினாலேயே குடும்பமாக தற்கொலை செய்துகொண்டனர்” எனக் கதை பரப்பித் திரிகின்றன. ஆனால் அவர்களது வீடு, குடும்பச் சூழல், வாழ்க்கை முறை போன்றவற்றை அவதானிக்கும் எவரும் அது ஊர் சொல்வது போன்று தற்கொலையல்ல என்ற முடிவுக்கு வர முடியும். மேல் பந்திகளில் சொன்னதைப் போல கந்துவட்டிக்காரர்களின் அடியாட்களது மிரட்டல்களால் ஏதாவது அசம்பாவிதம் நடந்திருக்கவும் வாய்ப்பிருக்கின்றது.

ஏனெனில் வடக்குப் பகுதியைப் பொறுத்தவரையில் தற்போது கந்துவட்டிக்காரர்களின் ஆட்சி தான் இடம்பெறுகின்றது. இலங்கை மத்திய வங்கியினால் தடைசெய்யப்பட்ட நிதிசார் கொடுக்கல் வாங்கல் முறைகளைக் கைக்கொண்டிருக்கும் அவர்களைக் கைதுசெய்யவோ, தண்டிக்கவோ இங்கு எவ்வித நீதிசார் பொறிமுறைகளும் இல்லை. அனைத்தும் அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் தான் இருக்கின்றன. கந்துவட்டிக்காரர்கள் கொடுக்கும் சாராயப் போத்தல்களுக்காகவும், இரவு விருந்துகளுக்காகவும் நீதி அடகு வைக்கப்பட்டுள்ள நிலையே இங்கு காணப்படுகின்றது. எனவேதான் கந்துவட்டிக்காரர்கள் அனைத்தையும் தீர்மானிக்கிறார்கள். வடக்கில் எழுச்சிபெறும் வாள் வெட்டுக்குழுக்களை அடியாட்களாக வைத்துக்கொண்டு தம் வேட்டையை வெற்றிகரமாக நடத்திக்கொண்டிருக்கின்றனர். இது ஒரு ஆபத்தான போக்கு. இந்தப் போக்கு வளர்ந்தால், ஆட்கடத்தல், கப்பம், ஆயுதப் பரிச்சயம் எல்லாம் மிகச் சாதாரணமாக இந்தப் பிராந்தியத்தில் நடக்கும். அந்நேரத்தில் வடக்குப் பகுதியில் மனிதர்களே வாழ முடியாத சூழல் உருவாகும்.


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்பேர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
luckysankaran@gmail.com
LuckyJewelleryMelborne
0387121974, 0415233284

# ஆதி சொல் அம்பலம் ஏறுமா?

## (பூர்வகுடிகள் பிரதிநிதித்துவ வாக்கெடுப்பு)



ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

நெருப்பில்லாமல் புகையாது என்பார்கள். இதையே கடந்த ஜனவரி மாதம் அலிஸ் ஸ்பிரிங்ஸ் நகரில் நடந்த கலவரங்களும், மத்திய ஆஸ்திரேலியாவில் தொடர்ச்சியாக நடந்த வன் முறைச் சம்பவங்களும் நமக்கு நினைவூட்டின. இந்தப் பிரச்சினையின் ஆணி வேர் எங்கே இருக்கிறது? நாம் வரலாற்றில் பின்னோக்கிச் சென்றால் தொடர்ச்சியாக பலநூறு வருடங்களாக ஆஸ்திரேலியாவின் பூர்வகுடி மக்கள் ஒடுக்கப்பட்டு வந்ததே இதற்குக் காரணம் என்பதைக் கண்டறியலாம்.

2007 ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் ஹோவர்ட் இடையீட்டு சட்டம் (Intervention Act) கொண்டு வந்தார். அதன்படி இந்தச் சட்டம் வடக்கு மாகாணங்களில் மது விற்பனைத் தடை, கூடுதல் காவல் கண்காணிப்பு, அரசு பூர்வகுடி நிலங்களைக் கையகப்படுத்துதல் போன்ற பல கடுமையான நடவடிக்கைகளை கொண்டதாகும். இதில் மதுத் தடை தவிர எல்லாம் காலப்போக்கில் திரும்ப அல்லது குறைக்கப்பட்டன . ஆனால் மது விற்பனைத் தடை மட்டும் சென்ற ஜூன் 2022 மாதம் திரும்பப்பெறப்பட்டது. அன்றிலிருந்து தொடர்ச்சியாக ஆறு மாதங்களுக்கு குடும்ப வன்முறை, குடி தொடர்பான குற்றங்கள் வட மாகாணமெங்கும் 50% அதிகரித்தன. அதைத் தொடர்ந்து அல்பனிஸ் அரசாங்கம் விசாரணைக் குழு அமைத்து அறிக்கை சமர்ப்பிக்கச் செய்தது. அந்த அறிக்கையின் முக்கியமான இரண்டு பரிந்துரைகளாவன-

1. மதுத் தடை
2. தேவைகளின் அடிப்படையிலான நிதிஉதவி .

நமது அரசாங்கம் வெகு விரைவாக மது விற்பனைக்குத் தடை விதித்தது.வழக்கம் போல மிக முக்கியமான விஷயமான பூர்வகுடிகளின் நெடுநாளைய பிரச்சினைகளைத் தீர்க்கத் தேவைப்படும் திட்டங்களுக்கான நிதி உதவி தொடர்பில் எந்தத் தொலைநோக்குப் பார்வையும் இல்லை .

இவை அனைத்தும் நமது சமூகத்தின் ஒவ்வொரு மட்டத்திலும் பூர்வகுடி மக்கள் எதிர்கொள்ளும் சகிக்க முடியாத ஏற்றத்தாழ்வுடன் நெருக்கமாகத் தொடர்புடையவை. இவ்வாறான பிரச்சினைகள் நேரும் போது, பூர்வகுடிகள் சார்பாக பேசுவதற்கும் ,அவர்கள் தரப்பு நியாயங்களையும் ,குறைகளையும் வெளிப்படுத்த- குரல் கொடுக்க- ஒரு அமைப்பு வேண்டும் என்ற கோரிக்கை எழும். பூர்வகுடிகள் விவகார அமைச்சர் லிண்டா பர்னே நாடாளுமன்றத்தில் அவர்களுக்கான குரல் எழுப்பும் அமைப்பு இருந்திருந்தால் ஆலிஸ் ஸ்பிரிங்ஸில் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது என்று கூறினார்.

இவ்வாறான சூழ்நிலையில் பிரதமர் அந்தோனி அல்பானிஸ் அரசியலமைப்புத் திருத்தம் மற்றும் பொது வாக்கெடுப்புக்கான கேள்வியின் இறுதி வடிவத்தை மார்ச் மாதம் வெளியிட்ட பின்னர், இந்த ஆண்டின் பிற்பகுதியில் நடைபெறும் வாக்கெடுப்பில் நாட்டின் முதல் மக்களான பூர்வகுடிகளை அங்கீகரிக்குமாறு ஆஸ்திரேலியர்கள் கேட்கப்படுவார்கள் எனவும் தெரிவித்தார்.

**கேள்வி :**

**முன்மொழியப்பட்ட சட்டம்: ஆஸ்திரேலியாவின் முதல் மக்களை அங்கீகரிப்பதற்காக பூர்வகுடி மக்களின் குரலின் தரப்பை நிறுவுதல். முன்மொழியப்பட்ட இந்த அரசியலமைப்பை மாற்றியமைக்கும் மாற்றத்தை நீங்கள் அங்கீகரிக்கிறீர்களா?**

**அரசியலமைப்பில் முன்மொழியப்பட்ட திருத்தம்:**

பூர்வகுடி மற்றும் டோரஸ் ஸ்ட்ரெய்ட் தீவு மக்களை ஆஸ்திரேலியாவின் முதல் மக்களாக அங்கீகரித்தல்:

1. பூர்வகுடி மக்களின் குரலுக்காக ஒரு அமைப்பு நிறுவப்படும்

2. இந்த அமைப்பின் குரல், பூர்வகுடிகள் சம்பந்தப்பட்ட ஆஸ்திரேலிய நாடாளுமன்ற மற்றும் இதர அரசாங்க விவகாரங்களில் பங்குபெறுவதற்கான முழு அதிகாரம் கொண்டதாகும்.

3. இந்த அரசியலமைப்புக்கு உட்பட்டு பூர்வகுடி மக்களின் குரல் தொடர்பான விடயங்கள், அதன் அமைப்பு, செயற்பாடுகள், அதிகாரங்கள் மற்றும் நடைமுறைகள் தொடர்பான சட்டங்களை இயற்றும் அதிகாரத்தை நாடாளுமன்றம் கொண்டிருக்கும்.

இந்த அமைப்பு பாலின சமத்துவ அடிப்படையில் 24 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் . இந்த மாதிரியின் படி மூன்று மாகாணங்களிலிருந்து (Northern Territory, ACT and Torres Strait ) தலா இரண்டு உறுப்பினர்களும், மேலும் தொலைதூர வட்டார பகுதிகளிலிருந்து ஐந்து உறுப்பினர்களும், மற்ற பெரிய மாகாணங்களிலிருந்து (Northern Territory, Western Australia, Queensland, South Australia and New South Wales ) தலா ஒரு உறுப்பினரும், நாடெங்கும் வாழும் டோரஸ் ஸ்ட்ரைட் தீவு மக்களின் பிரதிநிதியாக கூடுதலாக மற்றுமொரு உறுப்பினரும் தேர்ந்தெடுக்கப்படுவர் .



**"பூர்வகுடி மக்களாகிய நாங்கள் மற்றவர்களைப் போலவே நேர்மையான மனிதர்கள் தான் என்பதை நிரூபிக்க இன்னும் போராட வேண்டியுள்ளது"**

**-நெவில் போன்னேர்**

**(முதல் பூர்வகுடி ஆஸ்திரேலியா நாடாளுமன்ற உறுப்பினர் )**

உறுப்பினர்கள் நான்கு ஆண்டு காலத்துக்கு சேவை செய்வார்கள், ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்கும் பாதி உறுப்பினர்கள் தீர்மானிக்கப்படுவார்கள். ஒவ்வொரு உறுப்பினருக்கும் தொடர்ச்சியாக இரண்டு முறை பதவிக்காலம் என்ற வரம்பு இருக்கும். இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வெவ்வேறு பாலினத்தைச் சேர்ந்த இரண்டு இணைத் தலைவர்கள் அமைப்பின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.தேசிய அமைப்புக்கு இரண்டு நிரந்தர ஆலோசனைக் குழுக்கள் இருக்கும் - ஒன்று இளைஞர்கள், மற்றொன்று மாற்றுத்திறனாளிகள். இதைத்தவிர தார்மீக மற்றும் நிர்வாகம் குறித்து ஆலோசனை வழங்க ஒரு சிறிய நெறி முறைக் குழுமமும் ஏற்படுத்தப்படும் .

இந்த முன்வரைவு இரு நாடாளுமன்ற அவைகளில் நிறைவேறினால் மட்டுமே பொதுமக்களின் வாக்கெடுப்புக்குச் செல்ல முடியும். இவ்வாறான சூழ்நிலையில் எதிர்க்கட்சி தலைவர் Peter Dutton இன்னும் மேலதிக தகவல்கள் தெரியாமல் தங்களது நிலைப்பாட்டை சொல்ல முடியாது எனத் தெரிவித்துள்ளார். மற்றொரு எதிர்க் கட்சியான நஷனல்ஸ், இந்த குரல் அமைப்பு நாடாளுமன்றத்தில் மூன்றாவது அதிகார அமைப்பை ஏற்படுத்துமென்றும், நாங்கள் இதை நிராகரிப்போம் என்றும் கூறியிருக்கின்றனர். இதைத் தவிர பல்வேறு பூர்வகுடி அமைப்பினர்கள் ஆதரவும், சில அமைப்பினர் எதிர்ப்பும் தெரிவித்திருக்கின்றனர் . பிரதமரோ நான் இந்தத் சட்டத்திருத்தத்தை கண்டிப்பாக நிறைவேற்றியே தீருவேன் என்று சூளுரைத்திருக்கின்றார் .

அண்மையில் வடக்கு மாகாண கூட்டணி செனட்டர் ஜெசிந்தா பிரைஸ் கூறுகையில், "எங்களுக்கு குரல் தேவையில்லை, எங்கள் குறைகளைக் கேட்க காதுகள் தேவை," என்றார். கண்டிப்பாக இந்தப் பூர்வகுடிகளின் குரலை அங்கீகரிக்கும் இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டு அவர்களின் குறைகளுக்கு செவிமடுக்கப்படும் என்று நம்புவோம்.

இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் இயக்குநர் ஞானவேல், "சாதிப் பாகுபாடு, சட்ட அமுலாக்கம் மற்றும் நீதிபரிபாலனத்தில் உள்ள குறைகள் பற்றி பல நூற்றுக்கணக்கான கதைகளின் இறுதி வடிவம் தான் இந்தப் படம். ஒடுக்கப்பட்டவர்கள், அதிகாரம் பெறும்போது தான், என்னுடைய படம் தனது உண்மையான இலக்கை அடையும் . அநீதிக்கு எதிராகப் போராட அரசியல் சாசனம் தான் உண்மையான ஆயுதம்" என்று 'ஜெய்பீம்' படத்தை குறித்து பேசியிருப்பார் . 'ஜெய் பீம்' என்பது வெறும் வார்த்தையல்ல: அது ஒரு உணர்வு என்று உணர்ச்சி பொங்க கூறியிருப்பார். அதுபோன்று பூர்வகுடிகளின் அமைப்பின் குரல் வெறும் வார்த்தைகளல்ல .அல்லற்பட்டு ஆற்றாது அழுத ஆயிரமாயிரம் கண்ணீர் சிந்திய இந்த மண்ணின் மைந்தர்களின் உணர்வின் பிரதிபலிப்பாகவே இருக்க வேண்டுமென்பதே எனது ஆசை .

"அநீதிக்கு எதிராக போராட அரசியல் சாசனம் தான் உண்மையான ஆயுதம்"



# என் கொடிய இயந்திரா...!

## (ரோபோடெபிட்-ஆட்சியாளர்களின் அலட்சியம்)


ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

நெப்போலியன், கணிதமேதை லாப்ளேஸின் system of the world புத்தகத்தை பற்றிக் கேள்விப்பட்டபோது, 'லாப்ளேஸ் அவர்களே, நீங்கள் பிரபஞ்ச அமைப்பைப் பற்றி இவ்வளவு பெரிய புத்தகத்தை எழுதியதாக என்னிடம் கூறுகிறார்கள்,ஆனால் இந்தப் புத்தகத்தில் ஏன் படைத்தவனைப் ( God ) பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை?' என்று கேட்டதற்கு பதிலளித்த லாப்ளேஸ், 'எனக்கு ஒன்றும் அந்த சித்தாந்தம் (கருதுகோள் ) தேவையில்லை' என்றார். இதைப் போன்று நமது ஆட்சியாளர்களின் அனைத்துச் சட்டதிட்டங்களிலும், முறைமைகளிலும் பொதுமக்கள் நல்வாழ்வு குறித்து ஒன்றுமேயில்லையே என்று கேட்டால் அந்தச் சித்தாந்தம் எங்களுக்கு தேவையில்லை என்பதே அவர்களின் பதிலாக எப்போதும் இருக்கும்.

ஆஸ்திரேலியா, கனடா போன்ற வளர்ந்த நாடுகளின் சிறப்பம்சம் இங்கே மட்டுமே உள்ள சமூக நலத்திட்டங்கள் தரும் சமூகப் பாதுகாப்பே. அதாவது எந்த ஒரு குடிமகனுக்கும் இக்கட்டான சூழ்நிலை வரும்போது அரசாங்கம் அளிக்கும் நலத்திட்டங்கள் அளிக்கும் பாதுகாப்பு உத்திரவாதம். நம்மில் பலபேர் குடியுரிமை பெறுவதற்கு ஆஸ்திரேலியா போன்ற நாடுகளைத் தேர்ந்தெடுப்பதற்குத் இந்தத் திட்டங்கள் அளிக்கும் சமூகப் பாதுகாப்பு மட்டுமே மூல காரணம் என்பதை நாம் மறுக்க முடியாது . இந்தத் திட்டங்கள் (Disability Support Pension, Age Pension, Widow / Partner / Sickness Allowance மற்றும் இன்ன பிற ) வறுமை/ கைவிடப்பட்ட / நிராதரவான குடும்பங்களுக்கு நிதி உதவி அளித்து அவர்களை இக்கட்டான சூழலிலிருந்து உயிர்காக்கும் பணியை செவ்வனே செய்யும். ஒவ்வொரு முறையும் ஆட்சியாளர்கள் பதவிக்கு வரும்போது பட்ஜெட்டில் துண்டு விழும்போது ( தேசியக் கடன் சுமை உயரும் அபாயம் ) , இந்த நலத்திட்டங்கள் மூலம் அரசாங்கத்துக்கு ஏற்படும் செலவீனச் சுமையைக் குறைப்பதே அவர்களின் தலையாய கடமையாய் இருக்கும். அது மட்டுமில்லாமல் 2010 -2013 ஆம் ஆண்டுகளுக்கு இடையில், அரசாங்க சலுகைகளைப் பெற்ற 860,000 க்கும் மேற்பட்டவர்கள் தங்கள் வரி சமர்ப்பித்தல் கணக்குகளில் உள்ள முரண்பாடுகள் காரணமாக அரசாங்கத்துக்கு சராசரியாக 1400 அமெரிக்க டொலர் பாக்கி வைத்திருப்பதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டுவரை சமூக நலத்திட்ட உதவி பெறுபவர்களின் கோரிக்கையில் ஏதாவது "முரண்பாடுகள்" தெரிந்தால் , ஊநவெசநடமைெ அரசு ஊழியர்களால் நேரிடையாகச் சரிபார்க்கப்பட்டன, இந்த செயல்முறையின் படி சென்டர்லிங்குக்கு தெரிவிக்கப்பட்ட ஒரு நபரின் வருடாந்திர வருமானம் அதே காலகட்டத்தில் ATO வில் சமர்ப்பிக்கப்பட்ட அந்த ஆண்டு வருமானத்துடன் சரிபார்க்கப்பட்டு , ஏதாவது மோசடி இருப்பதாகத் தென்பட்டால் சம்பந்தப்பட்ட நபர்களை நேரடியாகத் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களை ( சம்பளச் சீட்டு மற்றும் இதர வருமான ஆவணங்கள் ) சமர்ப்பிக்கச் செய்வார்கள்.எல்லா விவரங்களையும் சரிபார்த்த பிறகே, ஏதாவது உதவிப்பணம் அதிகமாகக் கொடுத்திருப்பதாக அறிந்தால் மட்டுமே,கடன் கடிதம் அளிக்கப்படும்.

2015 ஆம் ஆண்டில் நலத்திட்டக் காவலனாக (Welfare Cop ) Scott Morrison ( சமூக சேவை அமைச்சர் ) வந்தார். அவரது பதவியேற்ற பிறகு மனிதவள சேவைகள் துறையின் (Dept of Human Services) தலைவருடன் நடத்திய ஆலோசனையில், இந்தச் செயற்பாட்டினை முற்றிலுமாக தானியக்கமாக ( automation ) மாற்றவேண்டும் என்று தீர்மானம் எடுக்கப்பட்டு, எந்தவித சட்ட ஆலோசனையுமின்றி வெகுவிரைவில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் மூலம் 1.8 பில்லியன் டொலர் சேமிக்க முடியுமென்று அரசாங்கம் தெரிவித்தது. இவர்கள் தன்னிச்சையாக எடுத்த முடிவில் எவ்வளவு பிழைகள் இருக்கின்றன என்று பார்த்தால், இந்த ஆட்சியாளர்களின் பொதுமக்கள் நலனின் மேலுள்ள அக்கறை உள்ளங்கை நெல்லிக்கனி போன்று நமக்கு விளங்கும் .

இதுவரை நேரடியான மனிதச் செயற்பாட்டால் நலத்திட்ட உதவிப்பண கணக்கீடுகளிலிருந்த முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்ட முறைமைகள் ,தடாலடியாக கணினி நிரல்கள் மூலம் தானியக்கப்பட்டு ,சம்பந்தப்பட்டவர்களுக்கு நேரடியாகக் கடன் கடிதம் அனுப்பப்பட்டது. அதாவது "இணக்கத் தலையீடுகளின்" (compliance interventions) எண்ணிக்கை ஆண்டுக்கு 20,000 இலிருந்து வாரத்துக்கு 20,000 ஆக உயர்ந்தது. இப்படி இயந்திரங்கள் வழிநடத்திய இந்த நடைமுறை செல்லமாக 'இயந்திரக் கடன்' / ரோபோடெபிட்' என்று அழைக்கப்பட்டது. மனிதர்களின் நேரிடையான தலையீடு இல்லாமல், இயந்திரங்கள் மூலம் கணக்கீடு செய்தால் நேர / பண விரயத்தைத் தவிர்க்கலாமே என்று நீங்கள் கேட்கலாம். ஆனால் இந்த ரோபோடெபிட்டில் உள்ள அடிப்படைகளைக் குறைகளை ஆராய்ந்தால் இது எவ்வளவு குறைபாடுள்ள செயலாக்கம் என்பது உங்களுக்கு புரியும் .

1. ரோபோடெபிட்டின் முக்கியமான குறைபாடு என்பது கூடுதலாகப் பண உதவி பெற்றார்கள் என்று நிறுவுவதற்கு சென்டர்லிங்க் ஆதாரமாகப் பயன்படுத்திய பெறுநரின் யுவுழு வில் சமர்ப்பிக்கப்பட்ட PAYG தகவலாகும். அந்த வருடத்தில் அவர் சம்பாதித்த பணத்தை , வருடம் முழுவதும் ஒவ்வொரு இரண்டு வாரங்களுக்கு சராசரியாக பகிர்ந்துவிட்டு , வேலை செய்யாத நாட்களிலும் பெறுநர் அரசாங்கத்திடம் இருந்து முறைகேடாகப் பண உதவி பெற்றார் என்று கூடுதலாகப் பெற்ற பணத்தை திரும்பத் தரச் சொல்லி கடன் கடிதம் அனுப்பப்படுகின்றது. எனவே, ரோபோடெப்ட் அமைப்பு சம்பந்தப்பட்ட நபர் உண்மையில் சம்பாதித்ததை புறக்கணிக்கிறது.

2. இப்படி இயந்திரங்கள் மூலம் அனுப்பப்பட்ட கடன் கடிதங்களில் எந்தவிதமான மேலதிகமான விவரங்கள் இல்லை

1. எவ்வாறு கடன் கணக்கீடு செய்யப்பட்டது?
2. கடனைத் திருப்பி அளிக்க அவகாசம் நீடிக்கப்படுமா?
3. குறைதீர்த்தலுக்கு யாரிடம் தொடர்பு கொள்வது?

சராசரி இணையத் தொடர்பு வசதிகளில்லாத எளிய மக்களுக்கு எவ்வாறு இதெல்லாம் விளங்கும்?. இவையெல்லாம் அவர்களைக் கடுமையான மன அழுத்தத்துக்கு உட்படுத்தின.




3. ரோபோடெப்ட் திட்ட உருவாக்கத்தில் சம்பந்தப்பட்ட Digital Transformation Agency (DTA), யுவுழு, சட்ட வல்லுநர்கள், துறை வல்லுநர்கள் மற்றும் தொடர்புடைய எந்தப் பங்குதாரர்களையும் கலந்தாலோசிக்காமல் சென்டர்லிங்க் நடைமுறைப்படுத்தியது.

4. இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு சுயநல அரசியல்வாதிகள், ஏற்கனவேயுள்ள உதவித்திட்ட குறைபாடுகளை மிகப்பெரிய சமூகப் பிரச்சினையாகப் பாவித்ததோடு மட்டுமல்லாமல் இவ்வாறு உதவி பெறும் பயனாளர்களை மோசடி செய்யும் கயவர்கள் போல நடத்திய அணுகுமுறைக் குறைபாடு.

இந்த ரோபோடெப்ட் திட்டத்தால் பயனாளர்கள் உண்மையில் செலுத்த தேவையேயில்லாத கடன்கள் , செலுத்த வேண்டியதை விட அதிகமான இல்லாத கடன்கள் அல்லது தங்கள் கடன்களை எதிர்த்துப் போராடும்போது அதே நேரத்தில் அவர்கள் பணத்தை கட்ட சொல்லி கட்டாயப்படுத்தப்பட்டனர். சில சந்தர்ப்பங்களில், ஆஸ்திரேலியர்கள் தங்கள் ஆவணங்களைத் தக்க வைத்துக் கொள்ளுமாறு யுவுழு கோரும் கால அளவுக்கு முந்திய கடன்கள் பற்றியும் அறிவுறுத்தப்பட்டனர். இந்த திட்டத்துக்கு முன்பு தகவல்களைச் சரிபார்க்க வேண்டிய பொறுப்பு சென்டர்லிங்கைச் சார்ந்தது.ஆனால் இந்தத் திட்டத்தினால் பயனாளிகள் தங்களைக் குற்றமற்றவர்கள் என்று நிறுவும் பொறுப்பு தடாலடியாகத் திணிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தினால் விளைந்த கேடு ஆஸ்திரேலியா வரலாற்றில் ஒரு கரும்புள்ளி.

கடன் தொல்லை தாளாமல் பயனாளிகள் தற்கொலை, இறந்தவர்களுக்கு மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு கடன் கடிதங்கள் அனுப்பியமை , மிகப் பலவீனமான 663 பெறுநர்களுக்கு ( மிகச்சிக்கலான மன நோயாளிகள், வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்கள்) அனுப்பிய கடிதத்தால் அவர்கள் மனச் சிக்கலுக்கு உள்ளாகி இறந்து போனமை என்று பல கொடுமைகளை சொல்லிக்கொண்டே போகலாம். இது எவ்வளவு பைத்தியக்காரத்தனமான நடைமுறை என்பது தெரிந்தும் இந்தத் திட்டத்துக்கு ஒப்புதல் அளித்தார்கள் மாண்புமிகு அமைச்சர்கள் (Scott Morrison, Christian Potter).

இங்கே நாம் எல்லோரும் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது புழுபடந ,யீடந , குயஉநடிழுமு போன்ற பகாசுர நிறுவனங்கள் வரி ஏய்ப்பு ( Double Irish kw;Wk; Double Irish மோசடி ) செய்வதும், கடந்த பத்து வருடங்களில் நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் அமைச்சர்களின் சம்பள உயர்வும் ஆட்சியாளர்களின் கண்களுக்கு என்றும் தெரியாது.

மக்களைப் பற்றி கொஞ்சம் கூட சிந்திக்க தெரியாத சுயநல, கயமை அரசியல்வாதிகளால் ஏதுமறியாத ஏறக்குறைய 2030 ( தற்கொலை மற்றும் பல்வேறு மன உளைச்சல் சார்ந்த நோய்கள் காரணமாக ) அப்பாவி மக்கள் இதுவரை இறந்துள்ளனர். பாதிக்கப்பட்டவர்கள் சில சட்ட நிறுவனங்களுடன் கைகோர்த்து அரசாங்கத்துக்கு எதிராக போராடி வெற்றி பெற்றனர். இதன்படி அரசாங்கம் பாதிக்கப்பட்ட 470,000 பேருக்கும் (மொத்தம் சுமார் 720 மில்லியன் டொலர்) மற்றும்பாதிக்கப்பட்ட 400,000 பேருக்கு 112 மில்லியன் அமெரிக்க டொலர் இழப்பீடாகவும் மொத்தமாக 1.8 பில்லியன் டொலர் இழப்பீடாக (தங்கள் சொந்த பணம் அல்ல, மக்களின் வரிப்பணத்திலிருந்து) அளிக்கப்பட்டது.

இந்தக் குற்றங்களையெல்லாம் விசாரிக்க அல்பனிஸ் அரசாங்கத்தால் 18 ஒகஸ்ட் 2022 சுயாதீன ரோயல் கமிஷன் நியமிக்கப்பட்டது. இந்த அமைப்பு வரும் 30 ஜூன் 2023 க்குள் இறுதி அறிக்கையை வழங்கும். இதுவரை வெளிவந்த விசாரணைத் தகவல்களிருந்து நமக்கு தெரியவருவது, அரசியல்வாதிகளின் எதேச்சதிகாரப் போக்கும் ,அரசாங்க அதிகாரிகளின் மெத்தனங்களும் சேர்ந்து எவ்வாறு அப்பாவி மக்களின் வாழ்க்கையிலும், உயிர்களிலும் தொடர்ந்து கடந்த ஐந்து வருடங்களாக விளையாடியிருக்கின்றன? என்பதுதான். கேட்கும் போதே நெஞ்சு கொதிக்கிறது. இந்த நிலைகெட்ட மாந்தர்களின் செயல்களை நினைத்தால்.

கடந்த 2017 ,பெப்ரவரி மாதம் 7ஆம் தேதி, சென்ட்ரலிங்க்கில் வேலை செய்யும் கடை நிலை ஊழியர் Colleen Taylor, அந்த நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பிலிருந்த Kathryn Campbell அவர்களுக்கு இந்த ரோபோடெபிட்டின் முறையின் அத்தனை பாதகங்களையும் விளக்கி 3000 வார்த்தைகளுக்கு மேலாக மிக நீண்ட மின்னஞ்சல் ஒன்றை அனுப்பியிருக்கிறார். வழக்கம் போல் அவரின் கடிதம் எந்தவித நடவடிக்கையுமின்றி கிடப்பில் போடப்பட்டது. அந்தக் கடிதத்தில் மிக முக்கியமான வாசகம் ஒன்று உண்டு " நமது மக்களிடமிருந்து திருடுபவர்களாக நாம் இருக்கக்கூடாது". இதை அனைத்து அரசியல்வாதிகளும் உணரக்கூடுமென்றால் ,நமது மக்களுக்கு என்றாவது ஒரு நாள் வெளிச்சம் கிடைக்கும் வாய்ப்பிருக்கிறது.

இந்தத் தோல்வி பொது சேவைகளை தானியக்கமாக்க (automate ), தகவல்கள் (data) மற்றும் வழிமுறைகளைப் (algorithms) பயன்படுத்துவதன் அபாயங்களுக்கு அரசாங்கம் மற்றும் வணிகங்கள் இரண்டையும் எழுப்பியுள்ளது என்று நாங்கள் நம்புகிறோம். இந்த தொழில்நுட்பங்கள் குறிப்பிடத்தக்க செலவு சேமிப்பு மற்றும் சேவை மேம்பாடுகளை உருவாக்குவதன் மூலம் சமூகத்திற்கு பயனளிக்கும், ஆனால் அவை பொறுப்புடன் செயல்படுத்தப்பட்டால் மட்டுமே

(We hope this debacle has awakened both government and businesses to the risks of using data and algorithms to automate public services. These technologies can benefit society by producing notable cost savings and service improvements, but only if they are implemented responsibly)

# ஆஸியில் மீட்கப்பட்ட ஆஞ்சநேயர்

இந்தியாவின் தமிழகத்திலிருந்து அமெரிக்காவரை கடத்திச் செல்லப்பட்டிருந்த பலகோடி பெறுமதியான - சுமார் 500 வருடங்கள் பழமையானது எனக் கூறப்படும் -ஆஞ்சநேயர் சிலை ஆஸ்திரேலியாவில் மீட்கப்பட்டுள்ள சம்பவம் கடந்த வாரம் முழுவதும் பேசு பொருளாக மாறியது.

தமிழகம், அரியலூர் மாவட்டம் செந்துறை அருகே உள்ள வெள்ளூர் கிராமத்தில் வரதராஜப் பெருமாள் ஆலயம் அமைந்துள்ளது. இது பழமையான - புகழ்பெற்ற ஆலயம். அங்கு தொல்லியல் பெறுமதிமிக்க பல சிலைகள் இருந்துள்ளன.

இந்நிலையில் 2012 ஆம் ஆண்டில் வரதராஜப் பெருமாள் சிலை, ஸ்ரீதேவி சிலை, பூதேவி சிலை, ஆஞ்சநேயர் சிலை உட்பட உலோகச் சிலைகள் கொள்ளையடிக்கப்பட்டன. இந்தக் கொள்ளைச் சம்பவம் அந்த ஊர் மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியது. மூட நம்பிக்கையில் மூழ்கியிருந்த சிலர் வேறு கோணங்களிலும் கதைகளைக் கட்டவிழ்த்துவிட்டனர்.இது தொடர்பில் ஆலய நிர்வாகிகள் செந்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையில், பொலிஸார் தேடுதல் வேட்டையில் இறங்கினர்.

பல கட்ட விசாரணைகளின் பின்னர் 2020 ஆம் ஆண்டு இந்த வழக்கு விசாரணை சிலை கடத்தல் தடுப்பு பிரிவுக்கு மாற்றப்பட்டது. சிலை கடத்தல் தடுப்பு பிரிவு அதிகாரிகள் வெளிநாடுகளில் இருக்கும் அருங்காட்சியகங்களில் வைக்கப்பட்டிருந்த சிலைகளோடு, இந்த நான்கு சிலையும் ஒப்பீடு செய்து, விசாரணைகளை மேற்கொண்டுவந்தனர்.இவ்வாறானதொரு பின்புலத்தில் அமெரிக்காவில் உள்ள கிறிஸ்டி அருங்காட்சியகத்தில் ஆஞ்சநேயர் சிலை காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தது. இந்தச் சிலையை ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த அமெரிக்கப் பிரஜையொருவர் ஏலத்தில் எடுத்துள்ளார். சுமார் 37,500 அமெரிக்க டொலரை அவர் வழங்கினார் எனக் கூறப்படுகின்றது.

சிலை கடத்தல் தரப்பு பிரிவு அதிகாரிகள் தொல்லியல் துறை நிபுணர்களோடு தமிழ்நாட்டில் களவாடப்பட்ட ஆஞ்சநேயர் சிலையையும் அமெரிக்காவில் உள்ள அருங்காட்சியகத்தில் ஏலத்தில் விடப்பட்ட சிலையையும் ஒப்பீடு செய்து பார்த்த போது இரண்டும் ஒரே சிலை என்பது தெரிய வந்தது.

உடனடியாக சிலை கடத்தல் தடுப்பு பிரிவு அதிகாரிகள் பொலிஸ்மா அதிபர் ஊடாக அமெரிக்கத் தூதரகத்துக்கு வேண்டுகோள் கடிதம் ஒன்றை அனுப்பினர். அதனை அடுத்து ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த அந்த நபர் ஆஞ்சநேயர் சிலையை அமெரிக்கத் தூதரகத்திடம் ஒப்படைத்தார்.

இதனை அடுத்து ஆஸ்திரேலியாவிலிருந்து ஆஞ்சநேயர் சிலை பல்வேறு பரிசோதனைகளுக்குப் பிறகு தொல்லியல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டது. சிலையைப் பெற்றுக் கொண்ட தொல்லியல் துறை அதிகாரிகள் கும்பகோணம் நீதிமன்றத்தில் அதனை ஒப்படைத்தனர்.

சட்டரீதியிலான பணிகள் முடிவடைந்த பின்னர் சிலை அதே கோவிலில் வழிபாட்டுக்காக வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஏனைய சிலைகள் தொடர்பான விசாரணைகளும் தொடர்கின்றன.





# இந்தியா: ஜனநாயகத்தின் தாயகமா?

**அ.பாக்கியம்**
(arubakkiyam@gmail.com)

இந்தியா ஜனநாயகத்தின் தாயகம் என்று இந்தியப் பிரதமர் மோடி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் முழங்கி வருகிறார். இந்திய ஜனநாயகம் 2000 ஆண்டுகள் பாரம்பரியம் கொண்டது என்கிறார். மேற்கண்ட இரு விஷயங்களிலும் இவர்கள் பெருமை கொள்வதற்கு எந்த வரலாற்று உண்மையும் இல்லை. 2000 ஆண்டுகளாக உலகத்தில் அனைத்து நாடுகளிலும் என்ன அரசமைப்பு முறை இருந்ததோ அதுதான் இந்தியாவிலும் சில மாற்றங்களோடு இருந்தது. மன்னர்கள் யாரும் ஜனநாயகவாதிகள் அல்லர். இந்தியாவைக் கைப்பற்றிய பிரிட்டிஷாரின் ஆட்சிக் காலம் அடக்குமுறைகளின் காலம்.

1947 சுதந்திரத்திற்கு பிறகு 2014 வரை அண்டை நாடுகள் போல் இராணுவப் பிடியின் கைக்கு அதிகாரம் செல்லாமல் பாதுகாக்கப்பட்டதற்கு , மக்களின் சுதந்திரப் போராட்ட அனுபவமும், ஜவஹர்லால் நேரு தலைமையான அரசும் முக்கிய காரணங்களாகும். முதல் அம்சம் ஜவஹர்லால் நேரு இராணுவத்தை குடிமைச் சமூகத்திலிருந்து பிரித்தெடுத்தார். இராணுவத் தளபதியை அமைச்சரவையிலிருந்து வெளியே நிறுத்தி, இராணுவ அமைச்சகத்தை உருவாக்கி அதற்கான அமைச்சரை நியமித்து அவருக்கு கீழ் இராணுவத்தைக் கொண்டு வந்ததும், முப்படைகளாகப் பிரித்ததும், உள்நாட்டு பாதுகாப்பு, எல்லைப்பாதுகாப்பு போன்றவற்றிற்கு CISF, BSF என்று தனிப்பிரிவுகளை உருவாக்கி, அவற்றை உள்துறை அமைச்சகத்தின் கீழ் கொண்டு வந்ததும் மிக முக்கியமான செயல். இவற்றுடன் அணி சேராக் கொள்கை, பஞ்சசீலக் கொள்கை, கலப்புப் பொருளாதாரம் போன்ற பார்வைகளும் கிடைத்த ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கு உதவின.

2014 இந்துத்துவா கார்ப்பரேட் நலன்களைப் பாதுகாக்கக் கூடிய அரசு அமைந்த பிறகு இந்திய ஜனநாயகம் பேரழிவைச் சந்தித்து வருகிறது. ஜனநாயகத்தை அழிப்பவர்கள்தான் அதிகமாக ஜனநாயகத்தைப் பற்றி பேசுவார்கள். உலகில் உள்ள பல அமைப்புகள் இந்தியா தற்பொழுது தேர்தல் முறையிலான சர்வாதிகார அமைப்பு என்று மதிப்பீடு செய்துள்ளனர். சில இஸ்லாமிய நாடுகளைப் போல் மதத்திற்கு கீழ் அரசியலைக் கொண்டுவரக்கூடிய செயற்பாடுகளில் இந்துத்துவா கார்ப்பரேட் ஆட்சி சுமார் 60 முதல் 70% முன்னேறி உள்ளது. இது வரலாற்றில் மத்திய கால நிகழ்வுகளை நினைவுபடுத்துகிறது.

இதன் தொடர்ச்சியாக தற்பொழுது கார்ப்பரேட் இந்துத்துவாவிற்கு எதிர்க்கட்சியினால், குறிப்பாக ராகுல் காந்தியின் பிரசாரத்தினால் மிகப்பெரும் ஆபத்து ஏற்பட்டு உள்ளது. அதானி விஷயத்தில் மோடி தலைமையிலான அரசு நிர்வாணமாக நிற்கிறது. தன்னைப் பாதுகாத்துக் கொள்ள எத்தனையோ ஆயுதங்களை எடுத்தது. நாடாளுமன்றத்தில் பேசியதையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கியது. லண்டனில் பேசியதற்காக அவர் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று நாடாளுமன்றத்தை செயற்பட விடாமல் தடுத்தனர். ஆனாலும் அதானி விஷயம் பூதாகரமாக எழுந்து கொண்டே இருக்கிறது. இவற்றைத் திசைதிருப்புவதற்காகதான் ராகுல் மீது சட்டத்தை மீறிய தாக்குதல் தொடுக்கப்பட்டது. இந்திரா காந்தி அதிகாரத்தில் இருக்கிற பொழுது படுகொலை செய்யப்பட்டார். அரசியல் வேறுபாடுகள் இருந்தாலும் அது ஒரு பயங்கரவாதம். ராஜீவ் காந்தி வெளிநாட்டுக் கொள்கையின் முரண்பாடுகளால் தேர்தல் காலத்தில் படுகொலை செய்யப்பட்டார். சோனியா காந்தி இந்த நாட்டின் பிரதமராக வரக்கூடாது என்பதற்காக, அவர் அந்நியர் என்று அஸ்திரம் கையில் எடுக்கப்பட்டது. ராகுல் காந்தி அப்பொழுது பிரதமராவதை விரும்பவில்லை, அதனால் பிரதமர் பதவி மன்மோகன் சிங்கை நோக்கி நகர்ந்தது.

இப்பொழுது மோடி அரசாங்கம் அம்பலப்பட்டு நிற்கிற பொழுது ராகுல் காந்தியின் நடவடிக்கையும், எதிர்க்கட்சிகளின் (முழுமையாக இல்லாவிட்டாலும், ஒரு பகுதியினரின்) ஒற்றுமையும் மோடிக்கு அச்சத்தை ஏற்படுத்தி உள்ளன. ராகுல் காந்தியின் களச் செயற்பாடுகள் கட்டி அமைக்கப்பட்ட மோடியின் பிம்பத்தை தகர்த்து வருகின்றன. எனவே தான் அவரை நோக்கி மட்டும் இந்த அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

2019- ஏப்ரல் 13, நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரத்தில் கர்நாடக மாநிலம் கோலார் தங்க வயலில் ராகுல் இப்படிப் பேசினார். “எனக்கு ஒரு கேள்வி எழுகிறது ஏன் இந்தத் திருடர்கள் அனைவரும் மோடி மோடி மோடி என பெயர் பெற்று உள்ளனர்? நீரோ மோடி, லலித் மோடி, நரேந்திர மோடி. இன்னும் சிறிது தேடினால் இன்னும் கூட கூடுதலான மோடிகள் வெளிப்படுவார்கள்”. இந்தப் பேச்சை அவதூறு என்ற சட்டத்துக்குள் கொண்டு வராமல் கிரிமினல் குற்றமாக கொண்டு வந்திருப்பதின் நோக்கம் தெளிவானது. அதே ஆண்டு ஏப்ரல் 16 ஆம் திகதி குஜராத் மாநிலத்தின் முன்னாள் அமைச்சர், தற்போதைய சட்டமன்ற உறுப்பினர், பூர்நேஷ் மோடி சூரத் மாவட்ட நீதிமன்றத்தில் மோடி சமுதாயத்தை ராகுல் இழிவுபடுத்திவிட்டார் என்று வழக்கு தொடுத்தார். 2021 ஜூன் 6, ராகுல் காந்தி நேரடியாக நீதிமன்றத்திற்கு சென்று விளக்கம் அளித்தார். பூர்னேஷ் மோடி மீண்டும் ராகுல் காந்தி கோர்ட்டுக்கு வரவேண்டும் என்று அழைத்தார். நீதிபதி தேவையில்லை என்றும் வழக்கு விசாரணையைத் தொடங்கலாம் என்று அறிவித்தார். புவனேஷ் மோடிக்கு அச்சம் வந்துவிட்டது.

எங்கே நீதிபதி நியாயத்தின்படி தீர்ப்பு வழங்கி விடுவாரோ என்ற காரணத்தினால் 2022 மார்ச் 7, குஜராத் உயர் நீதிமன்றம் சென்று வழக்கு விசாரணைக்கு தடை வாங்கி விட்டார். அதானி விஷயம் அம்பலத்துக்கு வந்தவுடன் 2023 பெப்ரவரி 16, உயர் நீதிமன்றம் சென்று தடையை நீக்கி இந்த விசாரணை தொடங்குவதற்கு அனுமதி வாங்கி விடுகிறார். மீண்டும் விசாரணை தொடங்குகிறது, அந்த மாவட்ட நீதிபதி தவே மாற்றப்படுகிறார் H.H. வர்மா என்ற நீதிபதி நியமிக்கப்படுகிறார். இவர் வந்தவுடன் விசாரணையை மிகக் குறுகிய காலத்தில் நடத்தி தீர்ப்பை வழங்கினார். நீதிமன்றத்தின் நடைமுறைகள் அரசியல் பழிவாங்கும் உள்நோக்கத்தோடு நடந்திருக்கின்றன என்பதை வெளிப்படுத்துகின்றன. நீதிமன்றத்தில் குறைந்தபட்ச நடைமுறைகளைக் கூட மாவட்ட நீதிமன்றம் கடைப்பிடிக்கவில்லை. பரவலான விசாரணை, சாட்சிகள் விசாரணை, சம்மன் அனுப்புவது, எதுவும் நடக்கவில்லை.

சி.பி.சி பிரிவு 202 இன் கீழ் பதிவு செய்த வழக்கில் உச்சநீதிமன்றம், உயர் நீதிமன்றங்களின் வழிகாட்டுதல்களைக் கடைபிடிக்கவில்லை. பேசியது கர்நாடகாவில், ராகுல் காந்தி குடியிருப்பது டெல்லியில், வழக்குத் தொடரப்பட்டதோ குஜராத் சூரத்தில். இதுவே அப்பட்டமான நடைமுறை மீறலும் சட்ட வழிகாட்டுதல்களை மீறிய செயலுமாகும். பேசிய இடத்திலோ அல்லது வசிப்பிடத்திலோதான் வழக்கைப் பதிவு செய்திருக்க வேண்டும். இந்த இரண்டும் நடைபெறவில்லை. இதேபோன்று இந்தியக் குற்றவியல் சட்டம் (IPC)499,500 ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களும் மீறப்பட்டுள்ளன.

இந்தப் பேச்சுக்களோடு எந்த விதத்திலும் பூர்னேஷ் மோடி என்ற நபருக்கு தொடர்பு இல்லை. 2023 மார்ச் 8, ராகுல் காந்தியின் தரப்பில் நீதிமன்றத்தில் எடுத்துரைக்கப்பட்ட வாதம் . “இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பேச்சுக்கள் நரேந்திர மோடி தொடர்பானவை. எந்த விதத்திலும் பூர்னேஷ் மோடி இதில் பாதிக்கப்பட்டவர் அல்லர். மேலும் இந்தப் பேச்சுக்கள் சாதியைப் பற்றியது அல்ல. மோடி என்பது ஒரு குறிப்பிட்ட சமூகம் கிடையாது. (பூர்னேஷ் மோடி பனியா வகுப்பை சேர்ந்த உயர்ஜாதி. நரேந்திர மோடி மோ- கன்ச்சி வகுப்பைச் சேர்ந்த பி சி பிரிவில் வருவார்) எனவே பூர்னேஷ் மோடி வழக்கு தொடுப்பதற்கு எந்த முகாந்திரமும் கிடையாது.” ஆனால் இந்த விவாதங்கள் எதுவுமே அரசியல் பழிவாங்கல் என்ற திரை மூடியதால் தீர்ப்பில் பிரதிபலிக்கவில்லை.

நீதிமன்றத் தீர்ப்பு வந்தவுடன் உடனடியாக நாடாளுமன்றத்தில் இருந்து ராகுல் காந்தியின் எம்.பி. பதவியை மின்னல் வேகத்தில் தகுதிநீக்கம் செய்துள்ளனர். நாடாளுமன்றக் குடியிருப்பை 30 நாட்களில் காலி செய்ய வேண்டும் என்ற ஆணையையும் வாங்கியுள்ளார்கள். இத்தனை அவசரம் இதுநாள் வரை இருந்தது இல்லை. இதே மோடி தலைமையிலான ஒன்றிய அரசு 2017 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் இது போன்ற வழக்குகள் தொடர்பாக விசாரணை வந்த பொழுது அரசின் சார்பில் தண்டனை அளித்தவுடன் பதவி நீக்கம் உடனடியாகச் செய்யக்கூடாது என்று தனது வாதத்தை தெரிவித்தது. இப்போது இவர்களே நீதிபதி தீர்ப்பில் கையெழுத்திட்ட பேனாவை கீழே வைக்கும் முன் தகுதிநீக்கம் செய்கிறார்கள் என்றால் இது வீரமல்ல, கோழைத்தனத்தின் உச்சம். சர்வாதிகாரத்தின் பழிவாங்கல்.




இதற்கு முன் பா.ஜ.க.வினர் பேசாத அவதூறு பேச்சுக்களா? நரேந்திர மோடி அவர்களே நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ரேணுகா சௌத்திரியை சூர்ப்பனகை என்று பேசினார். வெளியில் சோனியா காந்தியை ஜெர்சி பசு என்று மிக மட்டமாக பேசியது மட்டுமல்ல , ராகுல் காந்தியை கலப்புக் கன்று என்று அதைவிடத் தரம் தாழ்ந்து பேசினார். பா.ஜ.க.வினுடைய இன்றைய தலைவர்களில் ஒருவரான திரைக்கலைஞர் குஷ்பூ அவர்கள் காங்கிரஸில் இருக்கிற பொழுது ஊழல் என்றால் மோடி என்று பேசினார். இவை அனைத்தும் அவர்களுக்கு பிரச்சினை இல்லை.

இன்று அதானியால் மோடியின் சாம்ராஜ்யம் சரிகிற பொழுது எதிர்க்கட்சிகளின் முயற்சியாலும் , ராகுல் என்ற தலைவரின் பணிகளாலும் இந்துத்துவா கார்ப்பரேட் சிம்மாசனத்துக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. எனவேதான் ராகுலுக்கு சிறைத்தண்டனையை வழங்கி, 6 ஆண்டுகளுக்கு ராகுல் காந்தி தேர்தலில் நிற்க முடியாமல் செய்வதுதான் ஒன்றிய அரசின் நோக்கமே.

இந்திய ஜனநாயகத்தின் மீது ஏற்பட்டிருக்கும் மிகப்பெரிய தாக்குதலை, பாசிச நகர்வை எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து எதிர்க்க வேண்டும். எதிர்க்கட்சிகளின் முழுமையான ஒற்றுமை இன்னும் ஏற்படவில்லை. மேல்மட்டத் தலைவர்களிடம் ஏற்பட்டிருக்கக் கூடிய ஒரு பகுதி ஒற்றுமை கூட கீழ் மட்டத்தை நோக்கி நகரவில்லை. அமைப்புகள் மக்களிடம் செல்வதற்கு பதிலாக கூட்டங்களில் மூழ்கி இருக்கின்றன. ஒன்றுபட்ட மக்கள் இயக்கம் என்பது நரேந்திர மோடிக்கு எதிராக மட்டுமல்ல ஒட்டுமொத்தமாக இந்திய சமுதாயத்தை இந்திய நாட்டை கவ்விப் பிடித்திருக்க கூடிய பாசிசத்துக்கு எதிரானதாக அமையவேண்டும். ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற கடமை இந்தியர்கள் எல்லோருக்குமே உள்ளது.

# தூக்கம் உன் கண்களை தழுவட்டுமே..!






**மனநலக் குறைபாடுகளால் உண்டாகும் தூக்கப்பிரச்சினைகள் தொடர்பிலும், அவற்றைத் தீர்க்கும் வழிமுறைகள் பற்றியும் எதிரொலி வாசகர்களுக்கு விளக்குகிறார் சிட்னியின் பிரபல மனநல மருத்துவர் ரைஸ்.**

**தூக்கம் போனதால் நிம்மதி போனதா? இல்லை நிம்மதி போனதால் தூக்கம் போனதா?**

இரண்டுமே சரி தான்!

பொதுவாக மனச்சோர்வு மற்றும் ஏனைய மனநலக் குறைபாடுகளில் தான் தூக்கப் பிரச்சினைகள் ஏற்படும். ஆனால் வலி, இருதய மற்றும் நுரையீரல் நோய்களில் ஏற்படும் மூச்சு முட்டுதல், நெஞ்செரிச்சல், sleep apnea எனும் தூக்கத்தில் ஏற்படும் திடீர் சுவாசமுட்டு என்பன போன்ற பல உடல் உபாதைகளாலும் தூக்கப் பிரச்சினை ஏற்படலாம். எனவே தூக்க மாத்திரைக்கு அடிமை யாகாமல் தூக்கமின்மைக்கு என்ன மூலகாரணம் என அறி வது தான் சாலச்சிறந்தது. எனவே தான் ஆஸ்திரேலியாவில் மருத்துவர்கள் தூக்க மாத்திரை எழுதித் தர தயங்குகிறார்கள். உடல் உபாதைகள் ஏதும் இருக்கின்றனவா என ஆராய்ந்த பிறகு அவர்கள் நோயாளியை மனநல மருத்துவரிடம் அனுப்புகிறார்கள்.

தூக்கத்தில் நடக்கும் வியாதி (somnambulism) எனும் வித்தியாசமான தூக்க வியாதியும் உண்டு. இந்த வியாதி இருப்பவர்கள் இரவில் தங்களை அறியாமலே வீட்டுக் கதவைத் திறந்து வெளியில் போய் விட்டு திரும்ப வருவார்கள். இவர்களுக்கு விபத்து நடக்கும் வாய்ப்பும் ஆபத்தும் உண்டு.

வன்முறை, போர் போன்ற காரணங்களால் மனக்காயம் அடைந்தவர்களுக்கு தூக்கத்தில் கொடுங்கனவுகள் (nightmares) வந்து பயமுறுத்துவதால் மிகவும் சிரமப்படுவர். சில பேர் இதே காரணங்களால் கை கால்களை தங்களை அறியாமலே உதைத்து கட்டிலில் இருந்து கீழே விழுந்துவிடுவர். இதனை night terror என சொல்லுவர்.

பதற்றம் கொண்ட சில பேர் தூக்கத்தில் தங்களை அறியாமலே பற்களை நறநறவன்று கடிப்பர். இதனால் பற்களுக்கு பாரிய பாதிப்பு ஏற்படலாம். இதனை bruxism என்பர்.

விரட்டிய தூக்கத்தைத் திரும்ப அழைக்க சில குறிப்புகள் -

1. சாயங்காலம் (between 5. 00 PM and 6. 30 PM) நம்மால் முடிந்த நல்லஉடற்பயிற்சி.
2. சாயங்காலத்திற்குப் பிறகு கோப்பி, தேநீர், எனர்ஜி பானங்களைத் தவிர்த்தல்.
3. தூங்க நினைக்கும் நேரத்திற்கு 2 மணி நேரம் முன்னரே இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொள்ளுதல். நெஞ்செரிச்சல் வராத வண்ணம் காரம் தவிர்த்தல்.
4. அதற்குப் பிறகு தேவையில்லாமல் தண்ணீரைத் தவிர்த்தல் (நிறைய சிறுநீர் சேர்வதைத் தவிர்க்கத்தான்).
5. தூங்க நினைக்கும் நேரத்திற்கு குறைந்தது ஒரு மணி நேரத்திற்கு முன்னதாகவே மொபைல், லப்டொப் மற்றும் ரீவியைத் தவிர்த்தல். வெளிச்சம் கண்கள் வழி உட்புகுந்து மூளையை சுறுசுறுப்பாக இரு எனத் தவறாகத் தூண்டலாம். (natural sleep cycle-rhythm-Melatonin)
6. அதன் பிறகு ஒரு புத்தகத்தை எடுத்து வாசிக்கலாம். சற்று போர் அடிக்கும் புத்தகம் என்றால் நல்லது, தூக்கம் உடனே வந்து விடும். வாசிப்பு தூக்கத்தை வரவழைக்கும் என்பது தான் நமக்குப் பள்ளி நாட்களிலேயே தெரிந்திருக்குமே!
7. தூக்கம் உங்களைத் தட்டும் போது மட்டும் எழுந்து படுக்கைக்கு போங்கள். அதற்கு முன் போக வேண்டாம். படுக்கை என்றால் தூக்கம் தான், புரண்டு படுப்பதல்ல என மூளைக்குப் பழக்க வேண்டும்.
8. **முக்கியமான குறிப்பு :** படுக்கையில் படுத்தவுடன் (நமக்கு தூக்கம்) “வருமா வராதா” என கவலைப்படக் கூடாது. அதுவே பதற்றத்தை ஏற்படுத்தி தூக்கத்தைக் கெடுக்கும். தூக்கம் எப்போது வந்தாலும் எனக்கு ஓகே தான் என நினைத்து உங்கள் வாழ்க்கையில் நடந்த இனிமையான விடயங்களை மட்டும் அசை போடுங்கள்.
9. ஒரு ’கப்’ பால் குடித்தல், இதமான சூட்டில் குளித்தல் மற்றும் லவன்டர் ஒயிலை நெற்றியில் தடவுதல் போன்ற சில குறிப்புகளும் உண்டு
10. பொதுவாக கோபம், வெறுப்பு, பொறாமை தவிர்த்தல். நமது வாழ்க்கையை மற்றவர்களின் வாழ்க்கையோடு ஒப்பிடாமல் இருக்கப் பழகுதல்.
11. முடிவாக, தவறுகள் மற்றும் மனக்காயம் ஏற்படுத்தியவர்களை எளிதில் மன்னித்து விடுதல்.






**ஈழத்து அண்ணன்:** என்னடாப்பா, அண்டைக்கு விருது வாங்கிறனெண்டு ஓடினதுக்கு பிறகு ஆளையே காணக்கிடைக்கேலை?

**தமிழகத் தம்பி:** அதுவாண்ணே, ஊருக்கு போயிட்டு வந்தேண்ணே

**ஈழத்து அண்ணன்:** எட, சொல்லாமல் கொள்ளாமல் போட்டு வந்திட்டாய். சொல்லியிருந்தால் அப்பிடியே எங்கட ஊர்ப்பக்கமும் போட்டுவரச் சொல்லியிருப்பேனே?

**தமிழகத் தம்பி:** ஏதோ சிட்னில இருந்து மெல்பேர்ண் போயிட்டு வாற மாதிரி சொல்றீங்களே. நம்ம ஊர்ல இருந்து உங்க ஊருக்குப் போகணும்ணா பிளைட் பிடிச்சு, அங்க ஏர்போட்டில இருந்து நாள்முழுக்க டிராவல் பண்ணினாத்தான் உங்க ஊர் வரும். அதுக்கும் லட்சக் கணக்கில காசைக்கொட்டித்தான் போகணும்ணே. இதெல்லாம் உங்களுக்குத் தெரியாதோ?

**ஈழத்து அண்ணன்:** எல்லாம் தெரியுமடாப்பா, ஆனால் இனிமேல் இப்பிடி பிளைட் பிடிச்சு, இப்பிடி கனநேரம் அலைஞ்சு திரிய வேண்டியதில்லை. அதுக்குத்தான் உங்கட அரசாங்கம் ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டு வந்திருக்கு.

**தமிழகத் தம்பி:** என்ன திட்டமண்ணே, பலாலிக்கே நேரடியா பிளைட் விடுற திட்டமா?

**ஈழத்து அண்ணன்:** அது ஏற்கனவே பிளேன் ஓடுதுதானே. இது வேற திட்டம். எங்கட காங்கேசன் துறையில இருந்து உங்கட காரைக்கால் வரைக்கும் கப்பலொண்டு டெய்லி ஓடப்போகுது. காசும் குறைவு. ஒரு ஆளுக்கு நூறுகிலோ சாமான் சக்கட்டும் கொண்டுவரலாமாம். அதோட நாலு மணித்தியாலப் பயணம் தானாம்.

**தமிழகத் தம்பி:** ஆஹா..! நெசமாவா சொல்றீங்க? அப்டிண்ணா, இனிமேல் உங்கட சிலோன்காரங்கள் நம்ம நாட்டுக்கு கப்பல்ல படையெடுக்கப் போறாங்கள்.

**ஈழத்து அண்ணன்:** மாறியும் நடக்கலாமெல்லோ? உங்கட ஆக்களுக்குதான் இப்ப எங்கட இடங்கள் தேவை. விட்டால் சீனாக்காரன் எல்லாத்தையும் கொண்டு போடுவான். அந்தப் பயத்திலதான் இப்ப உந்தக் கப்பலே விடுகினமாம்.

**தமிழகத் தம்பி:** அண்ணே, சிலோன் ஒரு குட்டித்தீவு. நம்மட நாட்டுக்கு உங்க நாடெல்லாம் ஒரு மேட்டரே கிடையாது. ஏதோ தொப்புள்கொடி உறவெண்டதால உங்களுக்கு இந்தியா உதவுது

**ஈழத்து அண்ணன்:** நல்லாக் கிழிச்சீங்கள். அதுதான் கடைசிச்சண்டையில தொப்புள்கொடி உறவுகளுக்கு நீங்கள் என்ன செய்தியள் எண்டு தெரியும் தானே. ம்.

**தமிழகத் தம்பி:** அண்ணே, அதெல்லாம் இப்ப எதுக்கு? இப்ப நாம செய்ய வேண்டியது அடுத்த மாசம் நம்ம ஊருக்குப் போய், அப்பிடியே கப்பல்ல உங்க ஊருக்கும் போய்வரலாம்ணே

**ஈழத்து அண்ணன்:** ஓமோம், ஒரு சீட்டுப் பிடிச்சனான். அதை எடுத்துக் கொண்டு ஒருக்கா போட்டு வரத்தான் வேணும்.



ஒற்றன்

ஈழத்து அண்ணாவும்

# சட்டத்தில் கவனமின்மை

**சட்டத்தரணி - த.நா.ஜெயராசசிங்கம்**

இவர் முன்னாள் கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட உதவி விரிவுரையாளர். பின்னர் பிரிட்டனில் சட்டம் பயிற்று சட்டத்தரணியாகத் தேர்ச்சி பெற்றவர். பின் ஆஸ்திரேலியா மொனாஷ் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்றார். அதன் பின்னர் ஆஸ்திரேலியா விக்ரோறியா மாநிலத்தில் வழக்கறிஞராகத் தகுதிபெற்றவர். தற்போது சட்டம் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்.




சட்டத்திலுள்ள கவனமின்மை (Negligence ) என்னும் எண்ணக்கரு பற்றி இம்முறை பார்ப்போம்.

Donoghue V stevenson *(1932)* Ac *562, 580* என்ற வழக்கில் Lord atkin என்ற பிரித்தானிய நீதியரசர், பிரதிவாதியானவர் (dfendant) நியாயமான கவனம் எடுக்கத் தவறி வாதிக்கு (plaintiff) இழப்பு அல்லது சேதம் ஏற்படுத்துவதை தடுக்காமையாகும்" என வரைவிலக்கணப்படுத்தினார்.

" கவனமின்மை" என்பதற்கு நான்கு தேவைப்பாடான கூறுகள் உள்ளன. ''there are four requirments elements of Negligence" அவையாவன.

முதலாவது, கவனமெடுக்கவேண்டிய கடமை (duty of care).

இரண்டாவது, கடமையில தவறுதல் (breach of duty)

மூன்றாவது, காரணகாரியத் தொடர்பு (causation)

நான்காவது ,சேதத்தின் தொலைவு (remoteness of Proximity and Damage) அல்லது சேதத்தின் சேய்மை.

மேற்குறிப்பிட்ட நான்கு அம்சங்களையும் விரிவாகப் பார்ப்போம்.

### கவனமெடுக்கவேண்டிய கடமை

கவனமின்மை எனும் தீங்குக்கு ஒருவரை பொறுப்பாளியாக்கப்பட வேண்டும் என்றால் வாதியானவர் முதலில் பிரதிவாதி கவனம் எடுக்க வேண்டிய கடமை தொடர்பில் கவனமுடையவர் என்பதை நிரூபிக்க வேண்டும்.

இது பொதுவான தொழில் தருநர் - தொழிலாளி உற்பத்தியாளர் நுகர்வோர் ஆசிரியர் மாணவர் அரசாங்கம் குடிமக்கள் என்போரிடையே ஏற்படும்.

### கடமையில் தவறுதல்

ஒரு கவனமின்மை தொடர்பான வழக்கில் இரண்டாவதான தேவைப்பாடு, வாதியால் பிரதிவாதி கடமை மீறினார் என நிரூபிக்கப்பட வேண்டும்.

civil liability act 2002 (Nsw) (CLA) sc 5B(1) and 5B(2) இன் படி ஒருவர் கவனமின்மை என்னும் தீங்குக்கு பொறுப்பாளியாக காணப்பட பின் வரும் நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டும். அவையாவன,

குறிப்பிட்ட தீங்கு எதிர்பார்க்கப்படக் கூடியது

குறிப்பிட்ட தீங்கு குறிப்பிடத்தக்கது (significant)

ஒரு நியாயமாக மனிதன் மேற் குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் முன்னெச்சரிக்கையாக இருந்து இருப்பார்.

### காரணகாரியத் தொடர்பு

வாதியால் நிரூபிக்கப்பட வேண்டிய மூன்றாவது அம்சமானது தனக்கு ஏற்பட்ட இழப்பு பிரதிவாதியின் கவனமின்மையினால் ஏற்பட்டது என்பதாகும்.

காரணகாரியத் தொடர்பு (causation) என்பது "BUT FOR" சோதனை என ஆங்கிலத்தில் அழைக்கப்படும். இதில் பொருள் விளக்கம் என்னவெனில் வாதியானவர் குறிப்பிட்ட இழப்புக்குட்பட்டமை பிரதிவாதியின் கவனமின்மையான செயலாலேயே.

எனினும் சில நீதியரசர்கள் இந்த BUT FOR test என்பது நிறைவான விதி என்று சொல்ல முடியாது என கருத்து வெளியிட்டுள்ளனர்.

### சேதத்தின் தொலைவு

கவனமின்மை என்னும் தீங்கு சம்பந்தமான வழக்கில் வாதியால் நிரூபிக்கப்படவேண்டிய நான்காவது, இழப்பால் ஏற்பட்ட சேதத்தின் தொலைதூரமற்றது ஆகும் என்பது.

# புயலுக்குப்பின்...

ஊழிக்காலம்-2

43





எல்லாரும் நல்லமா சாப்பிட்டிட்டு படம் பாருங்க, இண்டைக்கு எல்லாரும் சந்தோசமா இருக்கவேணும்” என்றான்.

“ பிள்ளைகள் சார்பில் நன்றியும் புதுவருட வாழ்த்தும் சொல்லுங்க மம்மீ” என்றான். பார்வதி அதைச் சிங்களத்தில் கூறினாள். இதற்குள் நாலாம் ரீம் தலைவி ஒரு தட்டில் பலகாரம் கொண்டுவந்தாள். ஆளுக்கொன்றை எடுத்துக்கொண்டனர்.

“தேநீர் போடாதீங்க நாங்க அங்கயும் போவேணும்” என்றான் கப்டன் , எழுந்து இரண்டாம் முகாமான ‘பி’புளொக்குக்கு புறப்பட்டனர். அப்படியே “அம்மா வாங்கம்மா.. எங்ககூட சந்தோசமா..? ” என்றான்.

பார்வதி ரஞ்சினியிடம் “வா பிள்ளை போவம்” என்று அவளையும் சேர்த்துக் கொண்டாள். “அடுத்த வருசம் இங்கயா..?” சிங்களத்தை அரைகுறையாக விளங்கிக் கொண்டு ஒருத்தி வாயைப் பிளந்தாள். இரண்டாம் புளொக்கில் குசினிவேலைகள் கலகலப்பாக நடந்தது கொண்டிருந்தன. வந்தவர்கள் கூட்டம் கூடும் மரத்தடிக்கு சென்றபோது இங்கே விளையாட்டுச் சத்தம் காதைப் பிளந்தது. கிளித்தட்டு மறித்துக் கொண்டிருந்தனர்.

இரு கட்சியாகப் பிரிந்து இரணுவத்தினரால் தரப்பட்ட ‘அரைச்ச மஞ்சள்’ ரீசேட் ஒரு கன்னையும், ‘கட்டைமஞ்சள் நிறம்’ ஒரு கன்னையுமாக விளையாடிக்கொண்டிருந்தனர். அந்த ரீசேட் பலருக்கும் ‘கொட-கொடா’ வென்றிருந்தது. விளையாடுவோரைத் தவிர ஏனையவர்களும் பலர் இந்த ரீசேட்டுகளை அணிந்திருந்தனர். விளையாட்டு பெரும் கூச்சலுடன் நடந்தது. சிரித்தேறியாத கப்டன் தன் சின்னக் கண்களை இடுக்கிக் கொண்டு சிரித்தான். இவர்களுக்கு கதிரை போட்டு உட்காரவைத்தனர். விளையாட்டின் விதிமுறைகளை ரோசா அவர்களுக்கு சிங்களத்தில் கூறினாள். பலகாரங்கள் வந்தன. பரிமாறியவற்றை உண்டு வாழ்த்துகள் பரிமாறி ‘வீசீடீ’ கொடுத்துவிட்டு புறப்பட, மத்தியானம் அனைவரையும் சாப்பிட வருமாறு அழைப்பு விட்டாள் ரோசா. “இந்த வீசீடீ வேற ,எங்கட வேற” என்றாள் ரஞ்சினி. “ம்.. ரெண்டுபேரும் மாறிமாறி பாருங்க” என்றார் கப்டன். இரண்டும் விஜயின் படங்கள். மாலையில் இரண்டு பகுதிக்குமாக தாச்சிப் போட்டி ஒழுங்கு செய்யப்பட்டது. நடுக்காணியில் செம்மண் புழுதியில் கோடு போட்டார்கள். கடமையிலிருந்த இராணுவத்தினர் பார்வையாளர்களாக அழைக்கப்பட்டனர்.

பார்வதியை அழைத்தாள் ரோசா. “அம்மா விளையாட்டுப் போட்டியைத் தொடங்கி வைக்கிறா” என்றாள். பார்வதி அனைவருக்கும் கைகுலுக்கி கொடி அசைத்து ஆரம்பித்த போட்டி, முடிவில் வாக்குவாதமாகி கைகலப்பு வரை போய் விட்டது. ஏனையவர்கள் விலக்க வேண்டியதற்குப் பதிலாக அவரவர் பகுதிக்காக ஆக்ரோஷமாக பேசி சண்டையிட்டனர்.

இரவு படம் பார்க்குமிடத்தில் சந்திராவைக் காணவில்லை. பார்வதிக்கு பக்கத்திலேயே அவளுடைய சமையற்குழு இருக்கும். இன்று மற்றவர்கள் இருந்தாலும் சந்திராவைக் காணவில்லை. “மம்மீ அவா காலமையிலிருந்து அழுதுகொண்டிருக்கிறா” என்றாள் சிறீ.

பிள்ளைகளையோ, கணவனையோ எண்ணிக் கலங்கியிருப்பாள். அவளுடைய கணவன் வாய்பேசமாட்டாதவன். பிள்ளைகள் நான்கு வயதிலும் ஆறு வயதிலும் இருந்தனர் . கணவனின் தாய் கூடஇருந்தாள். இயக்கத்தில் இணைந்து இரண்டு வருடம் சேவை செய்தாள். முடியாது என்று துண்டு கொடுத்துவிட்டு ஆறுமாதம் பணிஸ்மென்ற். இவனைக் காதலித்து திருமணம் செய்து இரண்டு பெண் பிள்ளைகளை பெற்று சாதாரண குடும்பப் பெண்ணாக மாறியிருந்தாள். ஓமந்தையில் வந்த ஒலிபெருக்கி அறிவிப்பில் ,

“நீங்க ஒரு நாள் இருந்தா என்ன, பத்து வருசம் இருந்தா என்ன பதிஞ்சு போட்டு போங்க..” என்ற சொல்லை நம்பி பதியப் போனவள் இப்போது ஒன்பது மாதமாக இங்கே இருக்கிறாள்.

“அன்ரீ! இந்த சுமித்திரா! இயக்கம் பிடிச்சுக் கொண்டு போனது, ஒரு நாள்தான் . ஓடிவந்திட்டாள். இப்ப இஞ்ச ஒன்பது மாசம்” என்றவள்’ களுக்’கென்று சிரித்தாள்.

“ஜானகி இதைவிடப் பாவம். அது எங்கயோ வேலை செய்த பிள்ளையாம், தமக்கை காயப்பட மெடிக்ஸில வச்சு பாத்தக் கொள்ள நிண்டதாம், நான் இயக்கமில்லை எண்டு சொல்லவும், பரவாயில்ல வாங்க எண்டு ஏத்திக் கொணந்திட்டாங்கள்.”பார்வதியின் மனம் சந்திராவைச் சுற்றி சுற்றியே நின்றது.

“ பிள்ளை வயசுக்கு வந்திட்டாள். மற்ற நாள் என்னை பிடிச்சிட்டு வந்திட்டாங்கள். பிள்ளை பெத்தவளுக்குதான் இந்த வலி தெரியும்” என்றழுத கேரளத்துப் பெண்ணை அவளுடைய கணவன் கோர்ட்டில் மனு தாக்கல் செய்து விடுதலை செய்து கொண்டு போய் விட்டான்.

அந்தளவுக்கு சந்திராவின் கணவனால் இயலாது. அவன்தான் ஊமையாயிற்றே! அழட்டும். நன்றாக அழட்டும். மனச்சுமையை அகற்ற அதைவிடச் சிறந்த மருந்து எங்கேயிருக்கிறது? மன உளைச்சல்கள் கனவாக மாறி, தூக்கத்தை கெடுத்தது. இறந்து போனவர்கள், தெரிந்தவர் ,தெரியாதவர்கள் என்று கனவுகளில் அலைந்தார்கள்.

பார்வதிக்கு கனவுகளில் நம்பிக்கையுண்டு. அவளுடைய அனுபவத்தில் கனவுகள் பல பலித்துள்ளன. சின்ன வயதில் அவளுடைய தாத்தா வைத்திருந்த சகாதேவர் சாஸ்திரம் என்றநூலையும் படித்திருக்கிறாள். எல்லாம் அவர் இல்லாதநேரம் அவர் அறியாமல் படித்தவைதான். யாரும் நோயென்று படுத்தால் அவர்தான் மந்திரிப்பார். விபூதிபோடுவார். மருந்தும் கொடுப்பார். சிலரை உடனே வைத்தியசாலைக்கு கொண்டு போங்கள் என்றுவிடுவார். அவரும் அற்பநோயில் பலியானவர்தான்.இவருக்கு பின் பாட்டி அந்த வாகடங்களை வைத்து வைத்தியம் பார்த்தார். சொல்லப்போனால் பாட்டி கைராசிக்காரி. மணமாகி நீண்ட நாட்கள் குழந்தையில்லாத தம்பதியருக்கு ஒரு மண்டலம் மருந்து கணவனும் மனைவியும் காலையில் வந்து உண்பர். நாற்பது வயதில் அந்தப் பெண் ஆண்குழந்தையைப் பெற்றாள். எல்லாம் பாட்டியின் வாகடம். பார்வதி வெளிப்படையாகவே அந்த நூல்களையும் ஏடுகளையும் படித்தாள். அதை தற்செயலாகக் கண்ட தந்தை “உதையெல்லாம் ஏன் படிக்கிறாய்?” என்றார்.

“ சும்மா.. ஏன் கூடாதா..? என்று திருப்பி கேட்டாள்.

“ மந்திரமும் திருவும், மருந்தும் குருவருளும் உண்டென்பவர்க்கு உண்டு இல்லையென்பவருக்கு இல்லை” என்றார்.

“ அப்பிடியெண்டா..?”

“இதெல்லாம் உணர்வு சார்ந்த விசயம், நம்பிக்கை, நல்ல எண்ணம் இரண்டும் இருந்தால் நீ எதைக்குடுத்தாலும் மருந்து ,எதைச் சொன்னாலும் மந்திரம்..” என்றவர், ”சரி சரி உனக்கிப்ப விளங்காது போ போய் கொட்டப்பெட்டிய எடுத்துக் கொண்டு வா” என்றார்.

“ மம்மீ.. என்ன யோசினை..? “என்றபடி உள்ளே வந்தாள் உதயா.

“ இல்லடி ராத்திரி ஒரு கனவு அதத்தான் யோசிக்கிறன்.” என்றவள்,

“அது சரி நீ என்ன இஞ்ச..?” என்று கேட்டாள்.

“ சந்திராக்காட்ட நூல் வாங்க வந்தனான். நீங்க கனவை சொல்லுங்க.”

“ம்.. வெள்ளைத்துணியில கறுப்பு மையால எழுத எழுத அது உடன அழிஞ்சு வெள்ளை மின்னுது. வடக்கு நோக்கி போற ஒரு வாகனத்தில நான், திடீரெண்டு பாத்தா வாகனம் கிழக்கால திரும்பிட்டுது. பாதையோ சேறு. பாதைக்குள்ள வாகனம் இறங்கீற்றுது. நான் கண்விழித்தேன். உடலில் அசதி மட்டுமல்ல தலை விறைத்தது. மனநோயாளியாகிவிடுவனோ..? இல்லை நரம்புத்தளர்ச்சி?” பார்வதி மிகவும் குழம்பினாள்.

வைத்தியசாலைக்கு தன்னையும் பதிந்து கொண்டவள் உள்ளூர் வைத்தியசாலைக்காயினும் போக முடிவு செய்தாள்.

அன்றைக்கு வந்ததோ தட்டிவான், எப்பிடி எல்லோரும் போகமுடியும் ? கதவை அடைத்து நின்ற ’பி’ புளொக் பிள்ளைகள் மற்றவர்கள் உள்ளே வரவோ வெளியே வரவோ அனுமதிக்கவில்லை. காவற் கடமையில் நின்ற சிங்களச் சிப்பாய்ப்பெண் அவர்களை நோக்கி சிங்களத்தில் கத்தினாள். அவர்கள் போட்ட சத்தம் அவளுடைய கத்தலை அடக்கிவிட்டது, எட்டத்தில் நின்ற பார்வதியை அவள் கண்டுவிட்டாள்.

“அம்மா சொல்லுங்க...” என்று அவளைத் துணைக்கழைத்தாள்.

“ பிள்ளையள்.. ஒதுங்கி நிக்கட்டாம்..” என்று கத்தினாள் பார்வதி.

“ அடி வந்துட்டாவடி சப்போட்டுக்கு..”

“இவா.. தானே அவளுகளின்ர வால்..”

“ அன்ரீ நீங்க பேசாம நில்லுங்க” என்றாள் கவிதா. ஆனால் பார்வதியால் அப்படி இருக்க முடியவில்லை. சில பெண்கள் இங்கு கிடந்த மரங்களுக்குமேலே நின்று கத்தினார்கள். சிலர் கீழே நின்று கத்தினார்கள். பார்வதிக்கு சிரிப்பு வந்தது.

“ பிள்ளையள் பொத்துங்கோடி காணும்” என்றவள் மேலே பார்த்து ”மேலேயும் பொத்துங்க, கீழேயும் பொத்துங்க” என்றாள் அதை சிலேடையாக மாற்றினாள் ஒருத்தி “ எப்பிடி எப்பிடி கீழேயும் மேலயுமா..?” என்றாள்.

“அட இது பரவாயில்லையே தெளிவாகத் தான் இருக்கிறியள்” என்றாள் பார்வதி. ’சிக் இப்பிடி தர்க்கம் செய்யிறதவிட்டிட்டு என்ர வேலையைப்பாப்பம் ’என நினைத்த பார்வதி திரும்பினாள். அப்போது சார்ஜண்ட் வந்தான். எல்லோரையும் சுழன்று பார்த்தவன்

”கடுமையான வருத்தம் உள்ளவை மட்டும் வாங்க. மத்தாக்கள் நாளைக்கு போகலாம்” என்றான்.

“எல்லாம் இல்லை.. பதினெட்டு பேர் மட்டும்” என்றான்.

“ அம்மா.. எங்கே..?”

“ நான் ‘பிறசர்’ செக் பண்ண நாளைக்கு போறன் ”என்றாள்.

பார்வதி திரும்பிபோக, இவளுடைய முகாம் பிள்ளைகள் அவளை மொய்த்தனர். “ அன்ரீ ப்ளீஸ் எங்கட புளொக்கில எட்டுப் பேர் போடுங்க” என்றனர். மளமளவென்று எட்டுப்பேருடைய பெயரையும் எழுதிவைத்துவிட்டுத் திரும்பினாள் பார்வதி.


NS Systems SECURITY
1300 108 555
REALTIME SECURITY SYSTEM PROTECTION
IP / HD CCTV Systems
Alarm Monitoring
Access Control
Video Intercom
Security Fog System
Smart Home
Security Alarm
Data & Tele-communication
Ducted Vacuum
Solar CCTV
Digital TV Antenna
UTECH SOLUTIONS Corporate Group
Protect your Home & Family, Secure your Premises & Business.
1300 108 555 / 0447 533 555
www.nssystems.com.au / info@nssystems.com.au

Transco™ CARGO

# Happy Sinhala & Tamil New Year!



SHIPPING SCHEDULE

| MONTH | FINAL CUT-OFF DATE | EST ARRIVAL IN SL |
|---|---|---|
| January | 2023-01-07 | 2023-02-17 |
| January | 2023-01-14* | 2023-02-24 |
| January | 2023-01-21 | 2023-03-03 |
| January | 2023-01-28* | 2023-03-10 |
| February | 2023-02-04 | 2023-03-17 |
| February | 2023-02-11* | 2023-03-24 |
| February | 2023-02-18 | 2023-03-31 |
| February | 2023-02-25* | 2023-04-07 |
| March | 2023-03-04 | 2023-04-14 |
| March | 2023-03-11* | 2023-04-21 |
| March | 2023-03-18 | 2023-04-28 |
| March | 2023-03-25* | 2023-05-05 |
| April | 2023-04-01 | 2023-05-12 |
| April | 2023-04-15 | 2023-05-26 |
| April | 2023-04-22* | 2023-06-02 |
| April | 2023-04-29 | 2023-06-09 |

* Only at Campbellfield & Dandenong Transco offices

If you want to send it

FASTER



Air Delivery within 4- 7 Days

with Free Door Delivery Anywhere in Sri Lanka

LION XPRESS

POWERED BY TranscoCargo™

Hotline 1300 187 267

www.lionaircouriers.com.au

45 Adrian Rd, CAMPBELLFIELD - (03) 9357 7228

206-208 Discovery Road, DANDENONG SOUTH - (03) 9703 2255

follow us on

We love to deliver

SYDNEY - 02 9897 0004 | BRISBANE - 07 3219 0203 | ADELAIDE - 08 8322 8825 | PERTH - 08 9452 7707 | CANBERRA - 02 62821905 | DARWIN - 08 79790002 | TASMANIA - 03 90174167

1300 1 TRANSCO (1300 187 267) | WWW.TRANSCOCARGO.COM.AU